**தலைப்பு 282 - நீர்ப்பாசனத் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 282 – நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 ஜுன் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 ஜுலை 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை, நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க பொருண்மையானவை தொடர்ப்பிலும் நியாமான நிலைமையை பிரதிபளிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ் அறிக்கை 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த வியடங்களில் இருந்துதான தாக்கத்தை தவிரத்து எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை**

இந்த நிதிக்கூற்றுக்கை தயாரிக்கும் அடிப்படை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய 01 ஆம் பக்கம் தொடர்பில் கவணம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்ப பிரமாணம் 150, 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தினதும், பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மட்டும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்ட இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும், உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடகத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலை மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்
### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்களின் இறுதி மீதி ரூபா 110,269.78 மில்லியன் தொகையாக காணப்பட்ட போதிலும், 2024 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதி ரூபா 109,672.11 மில்லியன் தொகையென ரூபா 597.67 மில்லியன் தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | வருட இறுதி நிதி அல்லாத சொத்துக்கள் கூற்று (SA – 82) ஆரம்ப மீத மற்றும் 2023 வருட இறுதி நிதி அல்லாத சொத்துக்கள் கூற்று இறுதி மீதி இடையே ரூபா 597.67 மில்லியனிற்கான வித்தியாசம் அரச கணக்குத் திணைக்களத்தின் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் காணப்படும் சிக்கல் காரணமாக ஏற்பட்டிருந்தது. | CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் காணப்படும் சிக்கல்கள் சரி செய்யப்பட வேண்டும். |
| (ii) | திணைக்களத்தின் சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவினால் தயாரிக்கப்பட்டிருந்த அறிக்கைகளின் மூலம் இனங்கண்டிருந்த திணைக்களத்திற்கு சொந்தமான கட்டிடங்களின் எண்ணிக்கை 2562 தொகை எனினும், 616 கட்டிடங்களின் பெறுமதிகள் மாத்திரம் 2024 ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், 1946 | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் அனுப்பப்பட்டிருந்த பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி கட்டிடத் தொகுதிகளின் கூட்டுத்தொகை என 616 விடயங்கள் சிகாஸ் கணக்குகளுக்கு இனங்காணப்பட்டிருந்தது. | கணக்குகளில் உட்படுத்துப்பட்டிருக்காத அனைத்துக் கட்டிடங்களையும் சரியாக இனங்கண்டு பெறுமதி மதிப்பீடு செய்து கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடங்களின் பெறுமதி, பெறுமதி மதிப்பீடு செய்து நிதியல்லாத சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அந்த இனங்காணப்பட்ட கட்டிட கூட்டுத்தொகையில் ஒவ்வொரு கட்டிடங்களின் எண்ணிக்கையை வெவ்வேறாக தற்போது இனங் காணப்பட்டு வருகின்றது. | |
| (iii) | மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் தரவு முறைமையின் பிரகாரம் நீர்ப்பாசனத் திணைக்களம் / நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் / திணைக்களம் முகவரியின் கீழ் 1962 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கொம்ட்ரோலர் ஜனரால் அலுவலகத்தினால் இனங் காணப்பட்டிருந்த தரவு முறைமைக்கு 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உட்படுத்தப்பட்டிருந்த வாகனங்களின் எண்ணிக்கை 1159 தொகை மற்றும் அத்திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் எண்ணிக்கை 1202 ஆக காணப்பட்டது. மேலும், 2025 நவம்பர் 10 திகதிய வாகன இணைக்கப் படிவேட்டின் படி மேற்கூறிய 1962 வாகனங்களில் வெளித் தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த 431 வாகனங்கள் மற்றும் கோப்புக்களை கண்டறிய முடியாமையினால் அறுதியாக உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத 454 வாகனங்களும் காணப்பட்டன. எவ்வாறாயினும், 2025 நவம்பர் 10 திகதி அளவில் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்ற மொத்த வாகனங்களின் எண்ணிக்கை 1168 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் 83 வாகனங்கள் வெளி நிறுவனங்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் மோட்டார் வாகனப் போக்குவரத்து உத்தியோகத்தர் ஒருவர் உட்பட குழுவொன்றின் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்திருக்காமையால் பணிப்பாளர் (இயந்திரவியல்) ID/DM/HQ/01/16/NFAMS மற்றும் 2024 மே 21 திகதிய கடிதத்தின் மூலம் வாகனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து தகவல்களை வழங்கும் படி அறிவிக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்தவுடன் NFAMS முறைமைக்கு தகவல்கள் நாளதுவரையாக்கி குறிப்பிட்ட பெறுமதி சிகாஸ் முறைமைக்கு உட்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன். | அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், தரவு முறைமை நாளதுவரையாக பேணிச் செல்ல வேண்டும். கோப்புக்களை கண்டறிய முடியாமையால் அறுதியாக உறுதிப்படுத்த முடியாத 454 வாகனங்களும் எவரது பொறுப்பில் காணப்படுகின்றதென பரிசோதனை செய்து தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கும், வெளித் தரப்பினர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ள 431 வாகனங்களை உறுதிப்படுத்திய பின்னர் மோட்டர் வாகன திணைக்கள தரவு முறைமையிலிருந்து அகற்றுவதற்கும் கணக்கீடு செய்யப்படாத வாகனங்களை கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் காணி மற்றும் நீர்த் தேக்கங்களின் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,529,182.61 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் போது அதன் பெறுமதி ரூபா | 2023 மே 10 திகதி அரச கணக்குத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், விலை மதிப்பீட்டுத் திணைக்களம் மற்றும் எமது திணைக்களம் இடையே நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட | சொத்துக்களை மதிப்பீடு செய்யப்பட்ட அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். மேலும், நீர்த்தேக்க பெயர்களின் கீழ் அனைத்துச் |

102,156.84 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அதன்படி, 2024 ஆண்டின் நீர்த்தேக்கங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த நீர்த் தேக்கங்களின் கிரயம் கணிக்கப்பட்ட அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

மேலும், 2022 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த குளங்கள் நீர்த்தேக்கப் படிவேட்டின் படி திணைக்களத்திற்கு சொந்தமான குளங்கள், நீர்தேக்கங்கள் மற்றும் அணைக்கட்டுக்களின் எண்ணிக்கை 387 தொகை எனினும், 2024 ஆண்டில் அந்த காணிகள் மற்றும் நீர்த்தேக்கங்களின் பெறுமதிக்குரிய வழங்கப்பட்டிருந்த தகவல்களின் படி அந்த எண்ணிக்கை 295 தொகையாக காணப்பட்டது.

மேலும், வருடாந்த கணக்கீடு செய்யும் போது நீர்த்தேக்கங்களின் படி இனங்காணப்பட்டு அந்தச் செலவுகள் கணக்கீடு செய்வதற்கு பதிலாக ஒவ்வொரு செலவு விடயங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, நிதிக்கூற்றுக்களில் காணிகளின் கீழ் காட்டப்பட்டுள்ள நீர்த்தேக்கங்களின் பெறுமதியை திருப்திகரமாக மெய்மையாய முடியாமல் உள்ளது.

தீர்மானத்தின் படி திணைக்கள உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவொன்றின் மூலம் குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் பெறுமதி மதிப்பீடு செய்து உரிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையொன்று 2023 திசெம்பர் 21 திகதி சமர்ப்பிக்கப்பட்டது. குறிப்பிட்ட அறிக்கையின் அடிப்படையில் குளங்கள் மற்றும் நீர்தேக்கங்களின் பெறுமதி 2024 ஜனவரி மாதம் முதல் அரச கணக்குப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன், சிகாஸ் முறைமையில் கணக்கீடு செய்யப்பட்டது. இங்கு நீர்த்தேக்கங்களின் கீழ் காணப்படுகின்ற பெறுமதி 17823 விடயங்களின் கீழ் சுட்டிக்காட்டிய போதிலும், நீர்த்தேக்க பெயர்கள் (Location) படி அந்த விடயங்கள் பகிரப்பட்ட போது அவை 295 போன்ற குறைந்த விடய எண்ணிக்கையின் கீழ் சித்தரிக்கப்படுகின்றது.

மேலும், அருவிகள் மற்றும் கால்வாய்கள் / குளங்கள் / விரிகுடாக்கள் மற்றும் முகத்துவாரங்கள் / மணலுடனான இடங்கள் ஆகிய தொகுதிகளின் கீழ் 175 விடயங்களின் காட்டப்படுவதுடன், அவை பல்வேறு வலய அலுவலகங்களின் பல்வேறு சந்தர்பங்களில் CIGAS கணக்கு முறைமைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. மேலும், அந்தத் தொகுதிகளின் கீழ் உட்படுத்தப்பட்டிருந்த சில விடயங்கள் வகைப்படுத்தல் மாற்றமடைந்திருந்ததென சுட்டிக்காட்டுவதுடன், அவற்றின் நீர்த் தேக்கப் பெயர்கள் மற்றும் இடங்கள் சரி

செலவுகளும் மூலதனப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அந்த நீர்த்தேக்கங்களில் அடங்கியுள்ள சொத்துக்கள் ஆக்கக்கூறுகள் தொடர்பாக விரிவான தகவல்கள் நீர்த்தேக்கப் பெயர்களின் கீழ் சொத்துக்கள் பதிவேட்டில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்பட்டு அந்த பெறுமதியை குறிப்பிட்ட இடங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | |
| (v) | தல்பிடிகல நீர்த்தேக்க செயற்திட்டம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும், அந்த சொத்துக்களுக்குரிய பெறுமதி நீர்ப்பாசன அமைச்சின் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதெனவும், அதற்காக ரூபா 96.96 மில்லியனிற்கான சொத்துக்களின் பட்டோலையொன்று 2024 மே மாதம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. மேலும், நீர்ப்பாசனத் திணைக்கள செலவுத் தலைப்பின் கீழான ஏற்பாடுகளின் மீது ரூபா 8.96 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், 2023 திசெம்பர் 31 திகதி அளவில் தல்பிடிகல நீர்த்தேக்கத்திற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தச் செலவு ரூபா 646.87 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அதன்படி, செயற்த்திட்டத்திற்குரிய சொத்துக்களின் மொத்தப் பெறுமதி திணைக்களத்திற்கு முறைப் பிரகாரம் ஒப்படைத்தல் மற்றும் ஒப்புக்கொள்ளல் இரு தரப்பினர்களாலும் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால், செயற்திட்டத்தின் உள்ளவாறான கிரயம் கணக்குகளின் மூலம் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நீர்ப்பாசன அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த செலவு எவ்வளவு என இதுவரை எமக்கு அறிவிக்கப்பட்டிருக்காததுடன், அமைச்சினால் உரிய செலவு சொத்துக்கள் என இனங்கண்டு முறைப் பிரகாரம் உரித்தாக்கல் மேற்கொள்ளப்படின், கணக்கு முறைமையில் சொத்துக்கள் என இனங்காண முடியும். | தல்பிடிகல நீர்த்தேக்க செயற்திட்டத்தின் உண்மையான பெறுமதி திணைக்களத்தின் கீழ் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (vi) | கீழ் மல்வதுஓயா நீர்த்தேக்கச் செயற்திட்டம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சாட்டப்பட்டிருந்ததுடன், நீர்ப்பாசன அமைச்சின் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 38.40 மில்லியனிற்கான சொத்துக்கள் அமைச்சின் சிகாஸ் முறைமையில் இருந்து அகற்றி நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. மேலும், 2024 ஆண்டின் இந்த செயற்திட்டத்தின் செலவுகள் என நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் ரூபா 608.22 | - மேற்படி - | கீழ் மல்வதுஓயா நீர்த்தேக்கச் செயற்திட்டத்தின் சரியான பெறுமதி திணைக்களத்தின் கீழ் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மில்லியன் தொகை செலவிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், 2024 ஆண்டிற்குரிய நீர்ப்பாசன அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் நிதி அல்லாத சொத்துக்களில் நீர்த்தேக்கங்களின் கீழ் மல்வத்துஓயா நீர்த்தேக்கத்திற்காக ரூபா 495.63 மில்லியனிற்கான சொத்தொன்று தொடர்ந்தும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | | |

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிச் செல்லாமை**

திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பேணிச் சென்றிருக்காததுடன், சில பதிவேடுகள் முறைப் பிரகாரம் மற்றும் நாளதுவரையாக பேணிச் சென்றிருக்காமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | **அவதானிப்புப் பதிவேடு**<br>நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 07/99 இன் படி அனைத்து நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்கள், பிரதான வதவிட பொறியியலாளர் அலுவலகங்களில் மற்றும் வலய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகங்களில் அவதானிப்புக்கள் பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும், அந்த அலுவலகங்களில் அவதானிப்புப் பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | இந்த பதிவேடுகள் பேணிச்செல்லப்பட வேண்டும் என அனைத்து வலய நீர்ப்பாசனப் பணிப்பாளர்கள் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு CFO/FIN/instruction/2023-2025 இலக்கம் கொண்ட 2025.05.29 திகதிய கடிததத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது. | குறிப்பிட்ட பதிவேடுகள் பேணிச் செல்ல வேண்டும் என எழுத்துமூலம் மற்றும் வாய்மொழி மூலம் வழங்கப்பட்டிருந்த அறிவுரைகளுக்கு இணங்க செயற்படுகின்றனவா என உயர் முகாமைத்துவத்தினால் தொடர் நடவடிக்கை எடுத்து உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | **வெளிக்கள பண்டப் பதிவேடு**<br>நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 11/1986 கொண்ட சுற்றறிக்கையின் 05 ஆவது பந்தியில் நீர்ப்பாசனப் படிவம் 06 இன் படி வெளிக்கள களஞ்சியத்திற்கு கிடைக்கக்கூடிய அனைத்துப் பண்டங்களும் வெளிக்கள களஞ்சியத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரினால் வெளிக்க பண்டப் பதிவேட்டில் உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், பொறியியலாளர் உதவியாளரகளுக்கு | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வெளிக்கள வேலைகளுக்காக வழங்கப்படுகின்ற பண்டங்கள் தொடர்பாக பதிவு செய்வதற்காக குறிப்பிட்ட வெளிக்களப் பண்டப் பதிவேடுகள் பேணிச் சென்றிருக்கவில்லை. | | |
| (iii) | **தொழிலாளர் பதிவேடு**<br>1976 இன் 02 ஆம் இலக்க நீர்ப்பாசன திணைக்கள சுற்றறிக்கையின் படி திணைக்களத்திற்கு சொந்தமான ஒவ்வொரு பிராந்திய நீர்ப்பாசன அலுவலகங்களினாலும், தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் போது தொழிலாளர் பதிவேடு பேணிச் சென்றிருக்கவில்லை. | தொழிலாளர்களுக்காக தொழிலாளர் பதிவேடு பேணிச் சென்று கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டிய முறை தொடர்பாக அனைத்து நீர்பாசனப் பணிப்பாளர்களையும் அறிவுறுத்தி 2024 செப்தம்பர் 24 திகதி அறிவுரை வழங்கப்பட்டது. மேலும், 2025 ஆண்டு முதல் புதிய படிவமொன்றின் மூலம் தொழிலாளர் பதிவேடு பேணிச் செல்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |

## 2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் 1.6.1(அ)(i) கணக்காய்வு அவதானிப்புக்களின் படி முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்திருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **முன்னைய ஆண்டிற்கான அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு** | **செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரைகள்** | **இந்த அறிக்கையின் பந்திகளுடன் தொடர்பு** |
|---|---|---|
| 1.6.1.4(அ) | சுற்றறிக்கை அறிவுரைகளின் பிரகாரம் வெளிக்களப் பண்டப் பதிவேடு பேணிச் செல்ல வேண்டும். | 1.6.1(ஆ)(i) |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தெதுருஓயா பல்கரும அபிவிருத்தி செயற்திட்டத்தின் மின்வலுக்கூடமொன்று நடாத்திச் செல்வதற்காக நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் மின்சாரசபையின் முழுமையான உரிமையுடைய துணைக் கம்பனியொன்றுடன் 2017 ஒக்தோபர் 13 திகதி புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றுக்கு கைச்சாத்திட்டிருந்துடன், அந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரிவு 7.1 இன் படி துணைக் கம்பனியினால் மாதாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரம், மின்சாரசபைக்கு விற்பனையின் மூலம் கிடைக்கின்ற வருமானத்தின் 15 சதவீத வெகுமதிக் கொடுப்பனவு என நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு செலுத்துவற்கு இணங்கியிருந்தது. எனினும், 2021 ஜனவரி முதல் 2024 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியினுள் அவ்வாறு மின் உற்பத்தியின் மூலம் துணைக் கம்பனியினால் உழைக்கப்பட்ட வருமானத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 54.19 மில்லியன் தொகையில் ரூபா 42.84 மில்லியன் தொகை நிலுவையாக காணப்பட்டது. | நிலுவைத் தொகையை 2025 ஜூன் 15 திகதிக்கு முன்னர் செலுத்தும் படி 2025 மே 30 திகதிய நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் துணைக் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டது. | நிலுவைத் தொகையை தாமதமின்றி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மேலும், புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அணுகும் போது மின்சார விற்பனையின் மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்தில் 15 சதவீதம் வெகுமதி என தீர்மானிக்கப்பட்டது எந்த அடிப்படையில் என உறுதிப்படுத்தப்படாததுடன், கட்டணம் செலுத்துவதில் தாமதம் தொடர்பாக செயற்பட வேண்டிய முறையை காட்டக்கூடிய நிபந்தனை இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் உட்படுத்தியிருக்கவில்லை. | தெதுருஓயா பல்கரும அபிவிருத்தி செயற்திட்டத்தின் மின்வலுக்கூடமொன்று நடாத்திச் செல்வதற்காக கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை திருத்துவதற்காக உரிய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் வழங்கும் படி நீர்ப்பாசனப் பணிப்பாளர் (குருநாகல்) இற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி கட்டணம் அறவீடு செய்வதற்காக புரிந்துணர்வு உடன்படிக்கையை விரைவாக திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், 15 சதவீத வெகுமதிக்காக முறையான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3.2 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீடுகள் தயாரிக்கும் போது தேவைப்பாடுகளை இனங்காணாமல் பணம் ஒதுக்குதல் மற்றும் திட்டமிட்டவாறு வேலைகள் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் மீளாய்வாண்டின் போது 12 மூலதன செலவு விடயங்களில் ரூபா 7,035 மில்லியன் தொகையில் ரூபா 5,505.98 மில்லியன் தொகை அதாவது 78 சதவீதத்திற்கு மிகையான எண்ணிக்கையொன்று 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சேமிக்கப்பட்டிருந்தது. | ஒவ்வொரு அபிவிருத்தி கருமங்கள் தொடர்பாக காணப்பட்ட பல்வேறு காரணங்களினால் நிர்மாண வேலைகள் பேணிச் செல்வதற்கு முடியாமல் போன காரணத்தினால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டது. | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் முழுமையாக குறிப்பிட்ட ஆண்டிலேயே பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மாத்தளை மாவட்டத்தில் கொடிகமுவ குளத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக 2024 ஆண்டின் பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்காத போதிலும், உமாஓயா கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 60 மில்லியனிற்கான ஏற்பாடுகளை மாற்றப்பட்டிருந்தது. எனினும், அவற்றில் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 34.08 மில்லியன் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததுடன், அது தேறிய ஏற்பாடுகளில் 57 சதவீதமாக காணப்பட்டது. | நிர்மாண வேலை அலுவல்கள் 2024 திசெம்பர் 31 திகதி அளவில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும், சீரற்ற காலநிலையின் காரணமாக அந்த கருமங்களை நிறைவேற்ற முடியாமல் போனது. | மாற்றப்பட்ட ஏற்பாடுகளை குறிப்பிட்ட ஆண்டிலேயே முழுமையாக பயன்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மகாகிதுல நுழைவுச் சுரங்கம் மற்றும் இணைந்த கால்வாய் நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும், அந்த மொத்த தேறிய ஏற்பாடுகளும் பயன்படுத்தப்படாமல், முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. மதிப்பீடுகள் தயாரிக்கும் போது தேவைப்பாட்டினை இனங்காணாமல் பணம் ஒதுக்குதல், திட்டமிட்டவாறு அலுவல்கள் மேற்கொள்ளப்படாமை ஆகிய காரணங்களினால் இவ்வாறு பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த | இந்த சுரங்கம் நிர்மாணித்தல் தொடர்பாக திணைக்களத்திற்கு தொழில்நுட்ப ரீதியாக அனுபவம் காணப்படாததுடன், நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு அவ்வாறான கருமங்களை ஒப்புக்கொள்வதனால் தொழில்நுட்ப ரீதியாக பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டிருந்தது. இது தொடர்பாக நீர்ப்பாசன அமைச்சுச் செயலாளரின் அறிவுரையின் படி இந்த சுரங்கம் நிர்மாணிக்கும் கருமம் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தற்கு வழங்குவதற்கு | நிர்மாணிக்கும் இயலுமை மற்றும் தேவைப்பாட்டை இனங்கண்ட பின்னர் மாத்திரம் ஏற்பாடுகளை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அவ்வாறின்றி நிதி ஒதுக்கிக்கொள்ளல் தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். நிதிப் |

| | | | |
|---|---|---|---|
| | பணம் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | திட்டமிடப்பட்டுள்ளது. | பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளின் பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்ப்பாசன அமைச்சின் மத்திய நீர்ப்பாசன திட்டத்தை மறுசீரமைப்பதற்காக ரூபா 1,368.73 மில்லியன் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 828.87 மில்லியன் தொகையொன்று மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன்படி, ரூபா 539.86 மில்லியன் தொகை குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தியிருக்கவில்லை. | ரூபா 510 மில்லியன் ஏற்பாட்டுத் தொகையொன்று 2024 ஜூலை மாதத்தில் மற்றும் அதன் பின்னர் கிடைத்திருந்தது.<br><br>அந்த ஏற்பாடுகளினால் கிடைத்திருந்தவைகளில் அனேகமான விடங்கள் தேசிய போட்டிமுறை விலைகூறல் ஒப்பந்தங்களாக காணப்பட்டமையால் வேலைகளுக்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட போது 2024 / 2025 பெரும்போகம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததால், திட்டமிடப்பட்ட முன்னேற்றத்தை அடைய முடியவில்லை.<br><br>மேலும், 2024 இறுதி அரையாண்டில் காணப்பட்ட மிகை மழை மற்றும் வெள்ள நிலைமையினால் நிர்மாண வேலைகள் திட்டமிடப்பட்டவாறு மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | திட்டமிடப்பட்ட கருமங்கள் மேற்கொள்ளாமை தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள் போன்ற 20 அரச நிறுவனங்களின் மூலம் 29 பல்வேறு கருமங்கள் நிறைவேற்றுவதற்காக நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வழங்கப்பட்டிருந்த தொகை ரூபா 536.62 மில்லியன் தொகை எனினும், 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அவற்றில் செலவிடப்படாத மீதி ரூபா 82.70 மில்லியன் தொகையாக காணப்பட்டது. | இந்தப் பணம் எதிர் காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல், செயற்திட்டத்தின் மூலம் பொது வைப்புக் கணக்கிற்குக் கிடைக்கக்கூடிய பணம் ஆண்டின் போது கிடைக்கக்கூடிய முற்பணம் என கணித்து அந்த நிதியாண்டு முடிவடைவதற்கு முன்னர் செலவிடப்பட்டு, மீதி ஏதும் காணப்படின் உடனடியாக திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி வலய நீர்ப்பாசனப் பணிப்பாளருக்கு அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேலைத் திட்டமொன்றின் கீழ் ஆண்டின் போது செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகை மாத்திரம் விண்ணப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிதுடன், மீதியொன்று காணப்படின் அந்த ஆண்டின் போதே திருப்பியனுப்பி தீர்ப்பதற்கான வேலைத் திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். |

### 3.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் படி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கான ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றதென கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிதுடன், அந்த முறைமையின் வெற்றிகரத் தன்மை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன்படி முறைமையை வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அந்த மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வாண்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான எழுத்துமூலக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் நிதி ஆபத்து நிலைமையின் படி கூடிய ஆபத்து வரையறையில் இருந்து தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்கு இணங்க உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகளை அவதானித்து உரிய அலுவலகங்களுக்கு அந்த குறைபாடுகளை சரி செய்து கொள்ளல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை வலுப்படுத்தி பேணிச் செல்வதற்கு கருத்துரைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

| | அவதானிப்புக்கள்<br>சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1983 இன் 23 ஆம் இலக்க நீர்பாசன (திருத்திய) சட்டத்தின் பிரிவு 11 | நீர்ப்பாசன தண்ட நிதியமொன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | நீர்ப்பாசன தண்ட நிதியமொன்று நிருவுதல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் | 1983 இன் 23 ஆம் இலக்க நீர்பாசன (திருத்திய) சட்டத்தின் பிரிவு 11 ஏற்பாடுகளின் |

| | | | |
|---|---|---|---|
| | | அதாவது நீர்ப்பாசன அமைச்சுச் செயலாளரினால் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், தண்ட நிதியமொன்றை நிருவுவதற்குரிய அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென குறிப்பிடுகின்றேன். | பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 4.1, 4.4 மற்றும் 4.5 | 2025 மே 30 திகதியளவில் இறந்த 16 ஊழியர்களிடமிருந்து அறிவிடப்பட வேண்டிய ரூபா 2.05 மில்லியன் தொகை, ஓய்வுபெற்ற 51 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 4.92 மில்லியன் தொகை மற்றும் வேலை இடைநிறுத்தப்பட்ட, சேவையை வரிதாக்கிய மற்றும் வேலை இடைநிறுத்திய 39 ஊழியர்களிடம் அறிவிடப்பட வேண்டிய ரூபா 3.78 மில்லியன் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த மீதிகளில் 03 வருடங்களுக்கு மிகையான ரூபா 4.12 மில்லியனிற்கான பழமையான மீதியொன்றும் காணப்பட்டது. | அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தானபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடன் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அவ்வாறு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நி.பி. 104 | திணைக்களத்தில் ஏற்பட்டிருந்த ரூபா 4.39 மில்லியனிற்கான 15 நட்டங்கள் மற்றும் சேதனங்களுக்கான நி.பி. 104 விசாரணை மேற்கொண்டிருக்காததுடன், 02 நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக ரூபா 245,230 தொகை அறவீடு | 02 நட்டங்கள் தொடர்பாக காணப்படுகின்ற ரூபா 245,230 தொகை தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 15 நட்டங்களுக்குரிய ரூபா 4.39 மில்லியன் தொகை | நி.பி. பிரகாரம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு நட்டத்திற்கு பொறுப்பான நபர்களிடம் அரசிற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும். குறிப்பிட்ட காலப் பகுதியினுள் நி.பி. 104 விசாரணை |

| | | | |
|---|---|---|---|
| | செய்திருக்கவில்லை. | தொடர்பாக நி.பி. 104 இன் கீழ் விசாரணை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | மேற்கொள்ளப்படாத பொறுப்பான நபர்களுக்கு எதிராக ஒழுக்காற்றுச் செயற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும். |
| (ii) நி.பி. 138 | (i) பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களினால் நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல் வேலைகள் மேற்கொள்ளும் போது குத்தகை அடிப்படையில் இயந்திரங்கள் பெற்றுக்கொள்ளும் போது அந்த இயந்திரங்களை வேலைத்தளத்தில் ஈடுபடுத்தல் தொடர்பாகவும், தொழிலாளர்களை பெற்றுக்கொள்ளல் தொடர்பாகவும், உண்மையாக அந்த தொழிலாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும், வேலைத்தளத்திற்கு நேரடியாக பண்டம் பெற்றுக்கொள்ளும் போது உண்மையாக வேலைத் தளத்திற்கு பண்டங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டனவா என உறுதிப்படுத்திக் கொள்ளாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | தொழிலாளர்களுக்காக தொழிலாளர் பதிவேடு பேணிச் சென்று கொடுப்பனவு செய்யும் முறை தொடர்பாக அனைத்து வலய நீர்ப்பாசன பணிப்பாளர்களை அறிவுறுத்தி 2024.09.24 திகதி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | உறுதிச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி அனைத்து முறைகளினாலும் உறுதிப்படுத்திய பின்னர் கொடுப்பனவை சான்றுபடுத்தப்பட வேண்டியதுடன், அவ்வாறு செயற்படாத உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இங்கு ஏதேனும் முறைகேடுகள் ஏற்பட்டுள்ளனவா என கண்டறிய வேண்டும். |
| | (ii) மட்டக்களப்பு வலய நீர்ப்பாசன அலுவலகத்தினால் நிருவகிக்கப்படும் ருகம் பிராந்திய பொறியியலாளர் அலுவலகத்தின் | எதிர் காலத்தில் இவ்வாறான தவறுகளை தவிர்ப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சான்றுபடுத்தப்படாத உறுதிச் சீட்டுக்களுக்கான கொடுப்பனவு தொடர்பாக விசாரணை மேற்கொண்டு ஏதேனும் முறைகேடொன்று / நட்டமொன்று |

| | | | |
|---|---|---|---|
| | மூலதன சொத்துக்கள் அபிவிருத்தி மற்றும் புனரமைத்தலின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2.61 மில்லியன் தொகைக்கான 07 உறுதிச் சீட்டுக்கள் கொடுப்பனவு சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | | ஏற்பட்டிருக்கவில்லை என உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். |
| (iii) நி.பி. 569 | நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் ஆறுகள், அருவிகளை அண்டி சிறிய நீர் மின்உற்பத்தி நிலையங்கள் நிர்மாணித்தல், மணலை அகற்றுதல் உட்பட ஏனைய பொருளாதார நடவடிக்கைகளுக்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் போது பல்வேறு அரச நிறுவனங்களுக்கு பரிந்துரை வழங்குவதற்காக ரூபா 10,000 வீதம் கட்டணமொன்று அறவீடு செய்து மூன்றாம் தரப்பினருக்கு திருப்பிச் செலுத்துவதற்காக தற்காலிகமாக தடுத்து வைக்கப்படும் வைப்புக் கணக்கொன்று, தடுத்து வைத்து செலவிடப்பட்டிருந்தது. இந்த வைப்புக் கணக்கு 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 6.29 மில்லியனொன்று காணப்பட்டதுடன், நிதிப் பிரமாணங்களில் பிரகாரம் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவு தொடர்பாக அறுதியாக இனங்காணக்கூடியவாறு கணக்கீடு செய்திருக்கவில்லை. | சேகரிக்கப்படும் வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பாக அறுதியாக இனங்காணக்கூடியவாறு கணக்கீடு செய்வதற்கு மற்றும் வைப்புக் கணக்குகளில் சேமிப்பு காணப்படின் அரச வருமானத்திற்கு செலவு வைக்கும் படி அனைத்து பிரிவு / வலய தலைவர்களையும் அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சேகரிக்கப்படும் வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பாக அறுதியாக இனங்காணக் கூடியவாறு கணக்கீடு செய்வதற்கும் ஒவ்வொரு வலயங்களிலும் அந்த வைப்புக்களில் சேமிப்பு ஏதும் காணப்படின் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) நி.பி. 571 | 2025 மே 26 திகதியில் உள்ளவாறு 02 வருட காலத்தை மிகைத்த ரூபா 130.67 மில்லியன் தொடர்பான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. அந்த வைப்பு மீதிகளில் 05 வருடங்களுக்கு மிகையான காலவதியாகிய ரூபா 6.3 மில்லியனிற்கான வைப்புக்களும் அடங்கியிருந்தது. | மீதியான காணப்படும் வைப்பு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 02 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்கள் தொடர்பாக நி.பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) நி.பி. 753(1),(2) | பல்வேறு செயற்திட்டங்களின் கீழ் குளங்கள் / நீர்த்தேக்கங்கள் நிர்மாணித்தல் மற்றும் மறுசீரமைப்பதற்காக களத்திற்கு நேரடியாக கிடைக்கக்கூடிய பண்டங்களுக்காக பண்டங்கள் வழங்கும் கட்டளைகள் மற்றும் பண்டங்கள் பெறும் கட்டளைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | களத்திற்கு நேரடியாக கிடைக்ககூடிய பண்டங்கள் தொடர்பாக அறிவுரைக் கோவையொன்று வழங்கப்பட்டுள்ளது. | அறிவுரைகளுக்கு இணங்க செயற்படுகின்றவா என்பது தொடர்பாக முகாமைத்துவத்தினால் தொடர் நடவடிக்கை எடுத்து உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ள வேண்டும். |
| (vi) நி.பி. 756 | பிராந்திய நீர்ப்பாசன பொறியியாளர் அலுவலகங்களின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் மற்றும் நிர்மாண வேலைகளுக்கான பண்டங்கள் வழங்கிய பின்னர் பொறியியல் உதவியாளர்கள் பொறுப்பில் காணப்படும் பண்டங்கள் வருடாந்த பண்டக் கணிப்பீட்டுச் சபை மூலம் பௌதீக ரீதியாக பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான வேலைத் தளங்களின் பொறியியாளர் உதவியாளர்களின் பொறுப்புக்களில் காணப்படும் பண்டங்களின் மீதிகள் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்து வருடாந்த களஞ்சிய கணிப்பீட்டு சபை மூலம் மேற்கொள்ளும் படி இலக்கம் FIN/ST/VR/2024 மற்றும் 2024 நவம்பர் 27 திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது. | நி.பி. 756 ஏற்பாடுகளின் பிரகாரம் பொறியியல் உதவியாளர்களின் பொறுப்பில் காணப்படும் பண்டங்கள் வருடாந்த பண்டக் கணிப்பீட்ட சபை மூலம் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) நீர்ப்பாசனத் திணைக்களச் சுற்றறிக்கைகள். | | | |
| (i) 1982 இன் 23 ஆம் இலக்க நீர்பாசனத் திணைக்களச் | பொறியியல் உதவியாளரினால் தொடர்ந்து வரும் மாதத்தின் 05 கடமை நாட்களுக்குள் | மாதாந்த பண்ட அறிக்கை சமர்ப்பிக்கும் படி அனைத்து பிரிவுத் தலைவர்களையும் அறிவுறுத்தி அறிவுரைக | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், அந்த அறிவுரைகளுக்கு இணங்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் பந்தி (அ) | மாதாந்த பண்ட அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை. | கடிதமொன்று வழங்கப்பட்டுள்ளது. | செயற்படுகின்றனவா என தொடர்பாக முகாமைத்துவத்தினால் பரிசோதனை மேற்கொண்டு உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | 2023 பெப்ரவரி 28 திகதிய 03/2023 இலக்கம் கொண்ட நீர்ப்பாசனச் சுற்றறிக்கை | கள உத்தியோகத்தர்கள் தமது கடமை அலுவல்கள் மேற்கொள்வதற்காக முறையான மாதாந்த முன் நிகழ்ச்சித் திட்டம் முன்னை மாதத்தின் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தமது நெருங்கிய தலைவருக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ள பொறியியல் உதவியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களினால் கள கடமைகளுக்குரிய அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் அந்த உத்தியோகத்தர்களுக்கு கள கடமைகளில் ஈடுபட அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக அடிக்கடி சுற்றறிக்கைகளின் மூலம் வலய நீர்ப்பாசனப் பணிப்பாளர்களினால் கள உத்தியோகத்தர்களை அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், எதிர் காலத்தில் மேலும், கண்டறிந்து தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுரை வழங்கியுள்ளேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் கள உத்தியோகத்தரின் முன் நிகழ்ச்சித் திட்டம் அங்கீகாரிப்பதன் மூலம் கள கடமைகளுக்காக அங்கீகாரம் வழங்க வேண்டும். |

**3.6 வைப்புக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மூன்றாம் தரப்பினருக்கு திருப்பிச் செலுத்துவதற்காக தற்காலிகமாக தடுத்து வைக்கப்படும் வைப்புக் கணக்கில் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட சில வைப்புக்கள் உரிய கருமங்களுக்காக பயன்படுத்தப்படாமல் 2021 ஆண்டு | வைப்பு மீதிகளை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வைப்பு மீதிகளை விரைவாக தீர்க்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்த வைப்புக்களில் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 300,000 தொகையை விட கூடிய பெறுமதியுடனான 69 வைப்புக்களில் ரூபா 208.2 மில்லியனிற்கான மீதியொன்று காணப்பட்டது. | | |
| (ஆ) | மேற்கூறிய வைப்புக் கணக்கில் மூன்றாம் தரப்பினருக்குரிய வைப்புக்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், மூன்றாம் தரப்பினர் அல்லாத நீர்ப்பாசன உத்தியோகத்தர்கள் மற்றும் செயற்திட்ட பணிப்பாளர்களின் பெயரில் மேற்கொள்ளப்பட்டிருந்த 43 வைப்புக்கள் தொடர்பாக ரூபா 53.84 மில்லியனிற்கான மீதியொன்று 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்டது. எனினும், நீர்ப்பாசன அமைச்சு மற்றும் நீர்ப்பாசன திணைக்கள செலவுத் தலைப்பின் கீழ் இந்தப் பணம் தற்போது ஏற்பாடுகளுக்கு எதிராக செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, திறைச்சேரியினால் விடுவிக்கப்பட்டிருந்த நிதியம் இவ்வாறு செலவிடப்பட்டது என நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்து அதற்கு சமமான தொகையொன்று வைப்புக் கணக்குகளில் விளைவற்று காணப்பட்டது. | இந்த தடுத்து வைக்கப்பட்ட தொகை தொடர்பாக உரிய வேலைப் பகுதிகள் விரைவாக மேற்கொள்ளப்படின், குறிப்பிட்ட தரப்பினருக்கு அந்த பணத்தினை திருப்பிச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது தொடர்ந்தும் தடுத்து வைப்பதற்கான காரணத்தை அறிவிக்கும் படி உரிய வலய அலுவலகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | வைப்புக்களின் கீழுள்ள கருமங்களை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், மூன்றாம் தரப்பினர் அல்லாத உத்தியோகத்தர்களின் பெயரில் வைப்புக் கணக்கில் பணம் வைப்புச் செய்யப்படக் கூடாது. |
| (இ) | தெற்கு அதிவேக நெடுஞ்சாலை சீன கம்பனியினால் சில செயற்திட்ட கருமங்களுக்காக ரூபா 21.36 மில்லியன் தொகை காலி வலய நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. மாத்தறை நில்வளா அணைக் கரை செயற்திட்டத்தின் BR – 5 சுவர் 2003 ஆண்டு சேதம் ஏற்பட்டிருந்த காரணத்தினால் மாத்தறை கிரலகெலே பிரதேசத்தில் | இந்த வழிப்படலை நிர்மாணிப்பதனால் வழிப்படலை மற்றும் நில்வளா கங்கைக்கு இடையே வசிக்கும் பொது மக்களினால் இந்த நிர்மாண வேலை அலுவலகங்களுக்கு தீவிர எதிர்ப்பொன்று காட்டப்பட்ட காரணத்தினால் தொடர்ச்சியாக அந்த அலுவல் தாமதமடைந்தது. நில்வளா திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த இந்த வழிப்படலை திட்டமிடப்பட்ட | இந்தக் கருமங்களை விரைவாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஏற்பட்டிருந்த வெள்ள ஆபத்தினை கட்டுப்படுத்தும் குறிக்கோளுடன் அந்தத் தொகை வைப்புக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்தப் பணத்திலிருந்து ரூபா 1.12 மில்லியன் தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தமையால் ரூபா 20.24 மில்லியனிற்கான மீதியொன்று காணப்பட்டது. | உயரத்தில் மீண்டும் கொங்கிரீட் போடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு தற்போது மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. | |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 திட்டமிடல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்ப்பாசன திணைக்களத்தின் அமைப்புக் கட்டமைப்பின் படி முழு இலங்கையும் அடங்கக்கூடியவாறு 14 வலய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகங்களுக்கு பகிரப்பட்டு அதன் கீழ் 52 பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்கள் மூலம் குளங்கள், நீர்த் தேக்கங்களில் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அந்தக் கருமங்களின் மேற்பார்வைகள் நேரடியாக நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்திற்கு சாட்டப்பட்டுள்ளவாறு அமைப்பு கட்டமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 2024 ஆண்டிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இந்த ஒவ்வொறு அலுவலகங்களினாலும் மேற்கொள்வதற்காக திட்டமிப்பட்டுள்ள கருமங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு அலுவலகங்களினால் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள கருமங்கள் 14 வலய அலுவலங்கள் மற்றும் 52 பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்கள் என 66 அலுவலகங்களை உட்படுத்த வேண்டும் என இதுவரை அறிவுரை கிடைத்திருக்கவில்லை. | ஒவ்வொரு அலுவலகங்களினாலும் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள கருமங்களை குறிப்பிட்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அமைப்புக் கட்டமைப்பின் படி முழு இலங்கையும் அடங்கக்கூடியவாறு 03 இயந்திரப் பணிப்பாளர் அலுவலகங்களின் கீழ் 14 இயந்திர வேலைத் தளங்கள் என பகிரப்பட்டுள்ளது. | விசேடமாக நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற வாகன திருத்த வேலைகள், படலைகளின் திருத்த வேலை ஆகிய அலுவல்கள் முக்கியமாக மேற்கொள்ளப்படுவதுடன், | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| 2024 ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் அந்த ஒவ்வொறு அலுவலகங்களினாலும் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த கருமங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | அந்தக் கருமங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட வேண்டிய முறை தெளிவில்லாமல் உள்ளது. | |

**4.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) உமாஓயா கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி செயற்திட்டம்** | | |
| (i) செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 17,914.20 மில்லியன் தொகையில் செயலாற்றுகை அறிக்கையின் படி 2024 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 17,689.01 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டு 97.44 சதவீதம் பௌதீக முன்னேற்றமொன்றை அடைந்துள்ளது என குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் 2024 திசெம்பர் 23 திகதி நிர்மாணிப்பதற்காக எதிர்பார்க்கப்பட்டிருந்த புதிய வேலைக் கருமங்களும் உட்பட மீதியான வேலைகளுக்காக ரூபா 22,017 மில்லியன் தொகை வரை மதிப்பீட்டு பெறுமதியை திருத்துதற்கு மற்றும் காலத்தினை 2026 திசெம்பர் 31 திகதி வரை நீடிப்பதற்கு 2025 மே 26 திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன்படி, செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 12 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும், எதிர்பார்த்த நலன்களை முழுமையாக பெற்றுக்கொள்ளல் தொடர்ந்தும் தாமதம் அடைந்திருந்தது. | இந்த செயற்திட்டத்தின் நிர்மாண வேலை அலுவல்கள் 2024.12.31 திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், புதிதாக மேற்கொள்ளப்பட வேண்டிய அனேக கருமங்களுக்காக நிர்மாண வேலை அலுவல்கள் மேற்கொள்ளும் போது இனங்கண்டிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு 2021 ஆண்டில் காணப்பட்ட விலைகளின் கீழ் தயாரிக்கப்பட்டிருந்ததால் நிலவுகின்ற கூறுவிலைகளின் கீழ் உரிய கருமங்களை மேற்கொள்ளும் சிக்கல்களுக்கு முகங்கொடுத்திருந்தது. எனினும், தற்பொது இந்த செயற்திட்டத்தின் காலத்தை நீடிப்பதற்கும் மற்றும் திருத்திய மதிப்பீட்டிற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன், அதன்படி, நிர்மாண வேலை அலுவல்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை தொடர்ந்தும் தாமதப்படுத்தாமல் விரைவாக பூர்த்தி செய்து எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், பாதீட்டின் மூலம் கிடைக்கக்கூடிய ஏற்பாடுகள் அந்த ஆண்டிலேயே செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் | செய்முறை ரீதியாக கால்வாயொன்றின் சிறிய பகுதியொன்றின் நிர்மாண | திட்டமொன்றின் படி எதிர் பார்க்கப்பட்ட நலன்களை அடைவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | திட்டமிடப்பட்டிருந்த கட்டமைப்புக்கள் 2025 ஜூன் மாதம் வரை முழுமையாக பூர்த்தி செய்யப்படாமையால் செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்த பகுதிகளில் சிறு மற்றும் பெறும் போக ஆகிய இரண்டு போகங்களின் பயிர் அடர்த்தி ஆகிய 18,232 ஏக்கர் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் 48,132 வரை சிறு மற்றும் பெறும் மற்றும் இடைப் போகத்தை அதிகரிப்பதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், பயிர்ச் செய்யப்பட்ட மொத்த காணிகளின் எண்ணிக்கை 26,369 ஏக்கர் மாத்திரம் காணப்பட்டது. | வேலைகள் பூர்த்தி செய்யப்படாவிடின் மொத்த கால்வாய்களில் இருந்து கிடைக்கக்கூடிய நலன்களை பெற்றுக்கொள்ளப்படாமை இதற்கு காரணமாகும். | எடுக்க வேண்டும். |
| (iii) | குடாஓயா சிங்களயாகம கால்வாய் 36 கிலோமீற்றர் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், 2024 நவம்பர் 28 திகதி அளவில் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,037.21 மில்லியனிற்கான 91 வேலை விடயப் பகுதிகள் தொடர்ந்தும் பூர்த்தி செய்யப்பட வேண்டிக் காணப்பட்டது. அவற்றில் மதிபீட்டுக் கிரயம் ரூபா 563.82 மில்லியனிற்கான 61 வேலை விடயங்களில் எதுவித நிர்மாண வேலைகளும் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திருத்திய புதிய மதிப்பீட்டின் படி இந்த கால்வாய் நிர்மாணிப்பதற்கு தேவையான மொத்தத் தொகை ரூபா 3,171.33 மில்லியன் தொகையாகும் மீதியாகவுள்ள அனைத்து வேலைப் பகுதிகளும் திருத்திய மதிப்பீட்டின் மூலம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | விரைவாக வேலைகளை பூர்த்தி செய்து எதிர்பார்த்த நலன்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | ஹந்தபானாகல நீர்த்தேக்கத்தின் கொள்திறனை அதிகரித்து இடது கரையின் கால்வாயில் 15 நீர்ப்பாய்சன இடங்கள் மற்றும் 09 இடங்களில் வினியோகக் கால்வாய் நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், தென்கரை கால்வாயின் முதலாவது மூன்று வினியோகக் கால்வாய்கள் மற்றும் வயல் கால்வாய் எதுவும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட கருமங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மாற்றுவதற்கு நேரிடுகின்றது. அதற்காக பல்வேறு காரணங்கள் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. காணிகளை தனதாக்கும் சிக்கல்கள் மற்றும் அந்தப் பிரதேசங்களில் காணப்படும் நிரந்தரப் பயிர்ச் செய்கையை அகற்ற முடியாமை இந்த நிர்மாண வேலையை நிறுத்துவதற்கு காரணமாக இருந்தது. | செயற்திட்டத்திற்காக ஏற்பாடுகள் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக தாக்கத்தை ஏற்படுத்தும் சிக்கல்களை தீர்த்துக்கொள்ளல் உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும். அவ்வாறு பொறுப்புக்களை புறக்கணிக்கும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டும். |
| (v) | மதிப்பீட்டுக் கிரயாம் ரூபா 1.74 மில்லியனின் கீழ் 6 + 950 கிலோ மீற்றர் இடத்தில் DC 05 வினியோகக் கால்வாய் நிர்மாணிப்பதற்காக ரூபா 773,589 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதனொடு தொடர்புடைய FC 01 மற்றும் FC 02 என 02 வயற் கால்வாய்ப் பாதைகள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், அந்தக் கால்வாய் நிர்மணிக்கப்படாமையால் அதனை அண்டிய பயிர்ச் செய்கை காணிகளுக்கு நீர் வழங்குவதற்கு முடியாமல் உள்ளது. | இவ்வாறான கருமங்களுக்காக தொடர்ந்தும் ஏற்பாடுகள் பயன்படுத்தி நடாத்திச் சென்றால் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சில முக்கியமான நிர்மாண வேலைகள் மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் பாதகமொன்றாக காணப்படும். | எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்வதற்காக கால்வாயின் வேலைகளை பூர்த்தி செய்ய வேண்டும். |
| (vi) | மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 3.13 மில்லியன் தொகையின் கீழ் 7 + 500 கிலோ மீற்றர் இடத்தில் DC 06 வினியோகக் கால்வாய் நிர்மாணிப்பதற்காக ரூபா 2.17 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த வினியோகக் கால்வாயிற்கு FC 01 முதல் FC 06 வரை 06 வயற் கால்வாய்கள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்தக் கால்வாய்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண வேலை அலுவல்களுக்காக மதிப்பீடுகள் தயாரித்த போதிலும், ஏற்பாடுகள் ஒதுக்கும் போது ஒவ்வொரு வேலைகளுக்கும் தேவையான மொத்த ஏற்பாட்டுத் தொகையும் வழங்காத சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. இங்கு ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் எணணிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (vii) | மின்சாரசபைக்கு சொந்தமான மின்மாற்றி ஒன்று மற்றும் மின் கம்பிகளுடனான கமப்மொன்று காணப்படுவதனால் DC 06 வினியோகக் கால்வாய் சுமார் 30 மீற்றர் பகுதியொன்றின் நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த மின்மாற்றி ஒன்றுடனான மின்கம்பம் தொடர்பாக முன் ஆய்வு செய்யப்படாமல் இரு மறுங்களிலும் கால்வாய்கள் வெட்டப்படல் இதற்கு அடிப்படையாக இருந்தது. அதன்படி, DC 06 கால்வாயின் | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் எண்ணிக்கை வரையறுக்கப்படல், எதிர்பார்த்த அனைத்து வேலை அலுவல்களும் இந்த செயற்திட்டத்தின் மூலம் நிறைவேற்ற முடியாது. செயற்திட்டத்தின் ஏற்பாடுகள் எதிர் காலத்தில் சேமிக்கப்படின் மாத்திரம் மேலதிக வேலைப் பகுதிகள் தொடர்பாக கவனம் செலுத்த முடியும். | விரைவாக வேலையை பூர்த்தி செய்து எதிர்பார்த்த நலன்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்படாமையால் கால்வாயின் கீழ்ப் பகுதியில் சுமார் 1700 மீற்றர் பகுதியொன்று நீர்ப்பாசன நீர் வழங்க முடியாதுள்ளது. | | |
| (viii) | ரூபா 3.55 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தின் கீழ் 4 + 500 கிலோ மீற்றர் இடத்தில் R2 ரெகுலேற்றர் படலையொன்று ரூபா 3.29 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அடித்தளத்தில் இருந்து படலை உச்சமட்ட அளவில் உயர்த்திய பின்னரும் இடது கரையின் கால்வாயின் ரெகுலேற்றர் படகைகளுக்கு இரு மருங்கிலும் அமைந்துள்ள கொங்கிரீட் சுவர்களுக்கு மேலால் ஓடப்பட்டு காணப்பட்டது. அதன்படி, இடது கரையின் கால்வாயின் நீர் ஓட்டத்தை கட்டுப்படுத்தக்கூடியவாறு இந்த நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ரெகுலேற்றர் படலையின் இரு மருங்கிலும் காணப்படும் இரண்டு சுவர்கள் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் மிகை நீர் வரும் சந்தர்ப்பத்தில் அதனூடாக செல்வதற்கேயாகும். இந்தப் படலை திறந்திருந்தாலும், முடியிருந்தலும் நீர் சுவருக்கு மேலால் வழிந்தோட முடியும். அவ்வாறு ஏற்படுவதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. | இடது கரையின் நீரோட்டத்தை கட்டுப்படுத்தக்கூடியவாறு ரெகுலேற்றர் படலை நிர்மாணிக்கப்பட்டுள்ளதான என விசாரணை மேற்கொண்டு அறிவிக்கப்பட வேண்டும். |
| (ix) | அலிகொடஆர மற்றும் ஹந்தபானாகல நீர்த்தேக்கங்களை நிர்மாணிக்கும் போது மற்றும் கால்வாய்கள் நிர்மாணிக்கும் போது வெள்ளவாய பிரதேசத்தில் தனதாக்கிய 698 காணித்துண்டுகளுக்காக நட்டஈட்டுத்தொகையை செலுத்தி பூர்த்தி செய்திருந்த காணித்துண்டுகளின் எண்ணிக்கை 579 தொகையாக காணப்பட்டதுடன், அதற்காக செலுத்தியிருந்த நட்டஈட்டுத் தொகையின் பெறுமதி ரூபா 491.64 மில்லியன் தொகையாக காணப்பட்டது. எனினும், நட்டஈடு செலுத்தப்படாத 119 காணித் துண்டுகளில் 70 தொகைக்காக பெறுமதி மதிப்பீட்டையேனும் பெற்றுக்கொள்வதற்காக | காணிகளை உரித்தாக்கல், பகிர்தல், நட்டஈடு செலுத்தும் கருமங்களில் குறிப்பிட்ட பிரதேச செயலாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கணக்காய்வினால் குறிப்பிடப்பட்ட விடயம் பொருத்தமான விடயம் ஒன்றாக இருந்த போதிலும், அது தொடர்பாக உரிய அதிகாரியினாலேயே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதேச செயலகத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி நட்டஈடு செலுத்தும் அலுவல்களை விரைவுபடுத்தி பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், பெறுமதி மதிப்பீடு பெற்றுக்கொள்ளாத காணிகளுக்காக விரைவாக பெறுமதி மதிப்பீடு பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (x) | ஹந்தபானாகல இடது கரையின் கால்வாயின் கீழ் வெள்ளவாய பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 110 குடும்பங்களுக்காக நீர்ப்பாசக் காணிகள் வழங்குவது தொடர்பாக காணப்படுகின்ற சிக்கல்களை இனங்காண்பதற்காக வெள்ளவாய பிரதேச செயலகத்தினால் 2024 மார்ச் 19, 22, 23 மற்றும் 24 திகதிகளில் 110 நீர்ப்பாசன காணிகள் பெறுவோர்களில் 51 தொகை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரிசோதனையின் போது அவர்களில் 09 பேர்களின் மாத்திரம் பயிர் செய்கைக் காணி சிக்கலின்றிக் காணப்பட்டது. ஏனைய காணித் துண்டுகள் அங்கீகாரமின்றிய வதிவோரினால் ஆக்கமித்திருந்த காரணத்தினால் அந்தக் காணிகளுக்கு நுழைய முடியாமல் இருந்தது. | காணிகளை தனதாக்கும் கருமம் உமாஓயா பல்கரும செயற்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. உமாஓயா கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி செயற்திட்டத்தில் மூலம் உரித்தாக்கப்பட்ட காணித்துண்டுகள் தொடர்பாக உரிய அனைத்துத் தகவல்களும் செயற்திட்ட அலுவலகத்தில் காணப்படுகின்றது. | பிரதேச செயலாளரின் நேரடி தலையீட்டின் மூலம் இந்த அங்கீரமின்றிய காணிகளின் சிக்கலை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (xi) | செயற்திட்ட அலுவலகமொன்று தனியாக பேணிச் சென்றிருந்த போதிலும், காணிகளை தனதாக்கல், மீள் குடியேற்றல், நட்டஈடு செலுத்துதல் மற்றும் புதிய வயற் காணிகளை பகிர்ந்துகொடுத்தல் ஆகிய அனைத்து அலுவல்களும் தாமதமின்றி பூர்த்தி செய்தல், மற்றும் இலகுவாக்குவதற்காக நாளதுவரையாக்கப்பட்ட கணினி முறைமையொன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | காணிகளை தனதாக்கும் கருமம் உமாஓயா பல்கரும செயற்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. உமாஓயா கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி செயற்திட்டத்தில் உரித்தாக்கப்பட்ட காணித்துண்டுகள் தொடர்பாக உரிய அனைத்துத் தகவல்களும் பிரதிச் செயற்திட்ட பணிப்பாளர் அலுவலகத்தில் காணப்படுகின்றது. | தகவல்களை நாளதுவரையாக பேணிச் செல்வதற்காக கணினி முறைமையொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) **கீழ் மல்வத்துஓயா அபிவிருத்திச் செயற்திட்டம்** | | |
| (i) மேற்கூறிய செயற்திட்டம் ரூபா 22,900 மில்லியனிற்காக மதிப்பீட்டுத் தொகையொன்றின் கீழ் 2016 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 08 வருடங்களுக்குள் அதாவது 2024 பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. 2025 திசெம்பர் 31 திகதி வரை கால நீடிப்புக்கு விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையின் படி மீளாய்வாண்டு இறுதியளவில் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் ரூபா 1,817.44 மில்லியன் தொகை மற்றும் பௌதீக முன்னேற்றம் 7.03 சதவீதம் காணப்பட்டது. அதன்படி, மீதியான 92.97 சதவீத முன்னேற்றம் 2025 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நெருங்க முடியுமா என்பது கணக்காய்விற்கு சிக்கலாக காணப்படுகின்றது. செயற்திட்டத்தை குறிப்பிட்ட காலத்தில் பூர்த்தி செய்ய முடியாமையினால் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நலன்களை தேசிய பொருளாதாரம் இழந்திருந்தது. | இந்த செயற்திட்டத்தின் நிர்மாண வேலை அலுவல்கள் பாரிய அளவிலான அபிவிருத்திச் செயற்திட்டங்களை மீள் வியூகப்படுத்தல் மற்றும் விரைவுபடுத்தல் (RAMP) குழுவின் தீர்மானத்தின் படி தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது இந்த செயற்திட்டத்திற்குரிய ஆரம்ப மதிப்பீடு திருத்தப்பட்டுள்ளதுடன், செயற்திட்டக் காலம் 2029 திசெம்பர் 31 வரை நீடிப்பதற்குரிய அமைச்சரவை விஞ்ஞாபன வரைவொன்று நீர்ப்பாசன அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை அதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | செயற்திட்டம் இடைநடுவே நிறுத்தப்படாமல் தொடர்ந்து நடாத்திச் செல்வதற்காக நிதி சாத்தியத்தினை கவனத்தில் எடுத்த பின்னர் மாத்திர் செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், பாதீட்டின் மூலம் கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளை அந்த ஆண்டிலேயே செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செயற்படாத உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரே செயற்திட்டத்திற்காக தொடர்ந்தும் செயற்பாடுகள் ஒதுக்குவதன் காரணமாக புதிய செயற்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் தடைப்படுகின்றது என்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ii) மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் காணப்படும் நீர்த்தேக்கத்தின் வழிப்படலை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,573 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், இதுவரை நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. வழிப்படலை நிர்மாணிக்கும் வேலை தாமதமடைந்த காரணத்தினால் குளத்தின் அணைக்கரையில் 0 + 250 மீற்றரிலிருந்து 1 + 200 மீற்றர் வகையான பகுதியின் நிர்மாண வேலை அலுவல்கள் நிறுத்தப்பட்டிருந்தது. | இந்த விடயங்கள் சரியானவை. திருத்திய புதிய மதிப்பீட்டின் படி சிவில் வேலைகளுக்காக ரூபா 6,551 மில்லியனிற்கான தொகையொன்று தேவைப்படுகின்றது. இந்தத் தொகை ஏனைய செலவுகளுடன் ரூபா 11,044 மில்லியனாகும். இதற்குரிய ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக திறைச்சேரியை வினவிய போதிலும், இதுவரை பதிலேதும் கிடைத்திருக்கவில்லை. | எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்வதற்காக மேலும் தாமதிக்காமல் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iii) செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்காக 2025 திசெம்பர் 31 திகதி வரை விண்ணப்பித்த போதிலும், 2025 ஆண்டிற்காக விரிவான வேலைத்திட்டமொன்று தயாரித்திருக்காமையால், 2025 ஆண்டினுள் ஒதுக்கப்பட்ட ரூபா 5,000 மில்லியனிற்கான தொகையினை முழுமையாக பயன்படுத்தி செயற்திட்டத்தை பூர்த்தி செய்யும் இயலுமை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. | வருடாந்தம் ஏற்பாடுகள் ஒதுக்கிய போதிலும், அந்த ஏற்பாடுகளை செலவிடும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் பாதியளவு வழிப்படலை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. வழிப்படலையின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டால் ஏனைய நிர்மாண வேலைகளும் அதற்கு ஒத்த நிகழ்வாக மேற்கொள்வதற்கு இயலுமாக உள்ளது. அதேபோல், இவ்வாறான காணிகளை தனதாக்கும் கருமங்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு நேரடியாக மேற்கொள்ள முடியாது. அதேபோல், அரசினால் இது தொடர்பாக வழங்கப்படுகின்ற அறிவுரைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். அதனால் ரூபா 5,000 மில்லியன் தொகையை இந்த வருடத்திற்காக பயன்படுத்துதல் இதன்படி மேற்கொள்ள முடியாது. | முறையான திட்டமொன்றின்றி ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும். |

(இ) **ஏருவெவ – மஹாகந்தராவ நீரேந்து கால்வாய் செயற்திட்டம்**

| | | |
|---|---|---|
| இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 2,000 மில்லியன் மதிப்பீடொன்றின் கீழ் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டு 2024 – 2026 காலப் பகுதியில் அனுராதபுர பிராந்தி நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தினால் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக 2024 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 1,000 மில்லியனிற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட போதிலும், ரூபா 375.78 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன், 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 12.2 சதவீதமாக காணப்பட்டது. | இந்த மதிப்பீட்டில் ஏருவெவ மஹாகந்தராவ நீரேந்து கால்வாயுடன் தொடர்பில்லாத மஹாகந்தராவ, ஏருவெவ ஆகியவற்றின் அபிவிருத்தியும் அடங்குகின்றது. அடிப்படைக் குறிக்கோளாவது ஏருவெவ மஹாகந்தராவ நீரேந்து கால்வாய் நிர்மாணிக்கும் அலுவல்களை பூர்த்தி செய்து அடிப்படை குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதாகும். இந்தக் கருமம் தற்போது நீண்ட தூரத்திற்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மதிப்பீட்டுக்குரிய ஏனைய நிர்மாண வேலை அலுவல்கள் | செயற்திட்ட அலுவல்கள் திட்டமிட்டவாறு 2026 ஆண்டில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | விரைவாக பூர்த்தி செய்தவற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |

**(ஈ) நீர்பாசன சௌபாக்கிய தேசிய திட்டம்**

| | | |
|---|---|---|
| கம்பஹா மாவட்ட பிராந்திய நீர்ப்பாசன பொறியியாளர் அலுவலகம் நீர்ப்பாசன சௌபாக்கிய தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2021 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 37.21 மில்லியன் தொகைக்கான 03 செயற்திட்டங்களுக்காக ரூபா 16.06 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், இந்த செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 2025 ஏப்ரல் 04 திகதி அளவில் 04 வருடங்கள் காலம் கடந்திருந்த போதிலும், 45 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையான குறைந்த மட்டமொனறு காணப்பட்டது. | பனுகல குளத்தை அபிவிருத்தி செய்யும் கருமங்களுக்குரிய தொடர் வேலைகளை பூர்த்தி செய்வதற்குரிய அறிவுரைகள் பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் - கம்பஹா விற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், புஞ்சி மாஎலிய குளத்தின் நிறைவேற்றப்படாத கருமங்களுக்குரிய புதிய திட்டம் தற்போது திட்டப் பிரிவினால் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அது கிடைத்த பின்னர் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், புவக்கஸ் தெனியாய நீர்த்தேக்கம் நிர்மாணித்தல், கமநல சேவை திணைக்களத்தின் கீழ் நிறுவகிக்கப்படுவதனால் அதற்கான விசேட அங்கீகாரம் இன்றி நீர்ப்பாசன திணைக்கள ஏற்பாடுகளை பயன்படுத்த முடியாது. | நிர்மாண வேலையை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், தெனியாய நீர்த் தேக்கத்திற்காக தேவையான அங்கீகாரங்கள் தொடர்ந்தும் தாமதிக்காமல் பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும், தேவையான அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளாமல் ஏற்பாடுகள் பெற்றுக்கொள்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கக்கூடாது. |

## 4.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) யான்ஓயா நீர்த்தேக்கச் செயற்திட்டம்** | | |
| (i) இந்தச் செயற்திட்டம் ரூபா 48,355.3 மில்லியன் தொகைக்கான மதிப்பீட்டுப் பெறுமதியின் கீழ் 2012 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2021 ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட போதிலும், அந்தக் காலம் 2024 திசெம்பர் 31 திகதி வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன், அத் திகதியில் உள்ளவாறு ரூபா 41,953 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. ஹொரோபத்தான மற்றும் | யான்ஓயா நீர்த்தேக்கத்தின் கீழ் மாற்றுக் காணிகள் வழங்குவதற்காக திட்டமிடப்பட்ட காணிகள் எண்ணிக்கை 1,515 ஹெக்டயர்களாக காணப்பட்ட போதிலும், வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் விடுவிக்கப்பட்டிருந்த காணியின் எண்ணிக்கை 865.45 ஹெக்டயர் தொகையாகும். அதாவது, அனுராதபுர மாவட்டம் - 417.45 திருகோணமலை மாவட்டம் - 564 | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் பகிர்வதற்கு தேவையான மாற்றுக் காணிகள் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோத்தர் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், செலுத்துவதற்கு நேரிட்டிருந்த மேலதிக கொடுப்பனவு தொடர்பாக அவர்கள் பொறுப்பாக |

கோமரன்கடவெல பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய மேட்டு நிலங்கள் மற்றும் சேற்று நில புதிய காணிகள் 1,515 ஹெக்டயர்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் வழங்கி பயிர்ச் செய்கைக்கு வழங்குவது ஆரம்ப குறிக்கோளுடன் இந்த செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும், வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் விடுவிப்பதற்காக இணங்கியிருந்த காணியின் எண்ணிக்கை 865.45 ஹெக்டயராக காணப்பட்டது. இந்த காணி எண்ணிக்கையின் மூலம் 2025 மார்ச் 25 திகதி அளவில் 773.62 ஹெக்டயர் புதிய வயற் காணிகள் பயிர்ச் செய்கைக்காக நீர்ப்பாசன வசதிகள் வழங்கியிருந்ததுடன், 741.38 ஹெக்டயர் பயிர்ச் செய்வதற்காக விவசாயிகளுக்கு வழங்கியிருக்கவில்லை. மேலும், செயற்திட்டத்தின் காரணமாக வயற் காணிகளை இழந்தவர்களுக்காக உச்சமட்டம் 1.5 ஏக்கர் வீதம் வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், அதற்கு தேவையான வயற் காணிகளை இனங்கண்டு வன பாதுகாப்புத் திணைக்களத்தில் இருந்து விடுவித்துக்கொண்டிருக்காமையால் வயற் காணிகள் வழங்க முடியாமல் இருந்தது. அதன் காரணமாக வயற் காணிகளுக்கு பதிலாக 540 குடும்ப அலகுகளுக்காக உச்ச மட்டம் ரூபா 1.8 மில்லியன் வீதம் ரூபா 972 மில்லியன் மேலதிக நட்டஈட்டுத் தொகையொன்று 2025 மார்ச் 27 திகதியளவில் செலுத்தப்பட்டிருந்தது.

தொகையாகும். வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் காணிகள் விடுவிக்கப்பட்ட கால வரையறையின் படி தற்போது 773.62 ஹெக்டயர் தொகை அபிவிருத்தி செய்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், ஏற்பட்டிருந்த சுற்றாடல் சிக்கல்கள் மற்றும் நாட்டில் நிலவிய பொருளாதார பின்னடைவு காரணத்தினால் மீதியான 182.83 ஹெக்டயர்கள் (66.83 + 116) அபிவிருத்தி அலுவல்கள் தாமதமடைந்தது. இந்த அபிவிருத்தி அலுவல்கள் தற்போது இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது. அவற்றில் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த மீதியான 116 ஹெக்டயர்கள் மொரவெவ நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களின் கீழ் அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

01/2016 சுற்றறிக்கையின் படி காணி வழங்குதல் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் மேற்கொள்ள வேண்டியிருந்தது. தற்போது அபிவிருத்திக்காக போதியளவு காணி விடுவித்துக்கொள்ள முடியாமையினால் மாற்றுக் காணிகளுக்கு பதிலாக ரூபா 1.8 மில்லியன் வீதம் வழங்கப்பட்டு இந்தச் சிக்கலை தீர்ப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இருக்க வேண்டும். பாதீட்டின் மூலம் கிடைக்கக்கூடிய ஏற்பாடுகள் அதே ஆண்டிலே செலவிடப்பட வேண்டும். ஒரே செயற்திட்டத்திற்காக தொடர்ச்சியாக ஏற்பாடுகள் பெற்றுக்கொள்வதனால் புதிய செயற்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு முடியாமால் போதல் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(ii) நட்டஈடு செலுத்துதல் தாமதமடைந்த காரணத்தினால் தனதாக்கிய காணிகளுக்காக 38(அ) துணை ஏற்பாடுகள்

இது உரிய பிரதேச செயலாளர்களின் கருமமொன்றாக காணப்படுவதுடன்,

பிரதேச செயலாளர் ஊடாக மேற்கொள்ளப்படும் நட்டஈடு உட்பட

| | | | |
|---|---|---|---|
| | வர்த்தமானி பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை வழங்குதல் தாமதமடைந்த காரணத்தினால் முழுமையான நட்டஈடு தொடர்பாக நியதிச் சட்ட நட்டஈட்டுக்காக 7 சதவீத வட்டித் தொகையொன்று 05 வருடங்களுக்கு மிகையான காலப் பகுதிக்காக செலுத்த நேரிட்டிருந்தது. அதன்படி, 2025 மார்ச் 27 திகதியிலுள்ளவாறு ரூபா 392.53 மில்லியன் தொகை வட்டியாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இவ்வாறு செலுத்திய வட்டி உண்மையாக காணி இழந்தவர்களுக்கே செலுத்தப்பட்டதா என கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | அவர்களினால் மேற்கொள்ளப்படும் கோறிக்கைகளின் படி குறிப்பிட்ட நட்டஈடு மற்றும் வட்டித் தொகை அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. சட்டஈடு செலுத்தும் அலுவல்கள் பிரதேச செயலாளரின் பரிந்துரையின் மீது அனுப்பப்படுகின்ற நட்டஈட்டு விண்ணப்பப் பதிவேட்டின் படி எம்மால் ஏற்பாடுகள் பிரதேச செயலாளருக்கு வழங்கப்படுவதுடன், குறிப்பிட்ட நட்டஈடு பெறுவோருக்கு பிரதேச செயலாளரினால் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. பிரதேச செயலாளரின் கொடுப்பனவு செய்யப்படுகின்ற ஆட்களின் பதிவேடு எமக்குச் சமர்ப்பிக்கும் படி வேண்டப்பட்டுள்ளது. | அனைத்து கொடுப்பனவுகளும் மேற்கொள்வதற்கு முன்னர் கொடுப்பனவு செய்யப்படுகின்ற ஆட்களின் விபரங்கள் அடங்கிய ஆவணங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். வட்டித் தொகையொன்று செலுத்தப்படாத முறையில் தாமதமின்றி காணிகள் வழங்குவதற்கு அல்லது தேவையான விரிவான அட்டவணைகளை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நட்டஈடு செலுத்துவதில் தாமதம் காரணமாக செலுத்தப்பட்ட வட்டித் தொகை தொடர்பாக உத்தியோகத்தர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும். |
| (iii) | குறிப்பிட்ட தினத்தில் காணி வழங்கப்படாத காரணத்தினால் நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டு நிர்மாணிக்கும் போது வயற் காணிகளை இழந்தவர்களுக்காக 2014 / 2015 சிறுபோகம் முதல் 2018 / 2019 பெரும் போகம் வரை ஒரு ஏக்கருக்கு ரூபா 35,000 தொகை வீதம் பயிர்ச் செய்கையை இழந்த 08 போகங்களுக்காக ரூபா 345.45 மில்லியனிற்கான போக நட்டஈடு செலுத்தப்பட்டிருந்தது. இடது கரை கால்வாய் நிர்மாணிக்கும் போது காணியை இழந்தோர்களுக்காக 2018 சிறு போகம் முதல் 2023 பெரும் போகம் வரை இழந்த 11 போகங்களுக்காக ஒரு ஏக்கருக்கு ரூபா 50,700 தொகை மற்றும் மழை நீரினால் பயிர்ச் செய்யும் | “உரிய அனைத்து ஆவணங்களும் கணக்காய்வுப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது”. பிழையான பதிலொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட தினத்தில் செலுத்துவதற்கு இணங்கியிருந்த பயிர்ச் செய்கை காணிகள் வழங்குவதற்கு முடியாமை தொடர்பாக விசாரணையொன்று நடாத்தி அதற்கு பொறுப்பான உத்தியோகத்தரை இனங்காண வேண்டும். செலுத்தப்பட்ட பணம் காணிகளை இழந்தவர்களுக்கே செலுத்தப்பட்டதென உறுதிப்பாடொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எதிர் காலத்தில் இவ்வாறான மேலதிக கொடுப்பனவுகளை தவிர்த்துக்கொள்வதற்காக ஆக்கபூர்வமான செய்முறையொன்று |

| | | |
|---|---|---|
| விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூபா 35,000 தொகை வீதம் போக நட்டஈடு ரூபா 124.91 மில்லியன் தொகை செலுத்தியிருந்தது. அதன்படி, காணிகளை இழந்தோருக்கு உரிய முறையில் வயற் காணிகள் வழங்கப்படாமையால் ரூபா 470.36 மில்லியனிற்கான நட்டஈடு செலுத்த நேரிட்டிருந்தது. இவ்வாறு செலுத்திய நட்டஈடு காணிகளை இழந்தவர்களுக்கே செலுத்தப்பட்டதென கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. | | அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) நீர்ப்பாசனக் காணிகள் வழங்கப்படாத காரணத்தினால் வாழ்வாதார வழிகளை இழந்த நபர் ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 2000 வீதம் உச்சமட்டம் ரூபா 8000 வரை வாழ்வாதாரக் கொடுப்பனவு என 2024 நவம்பர் 30 திகதி வரை ரூபா 505.87 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக ஒவ்வொரு நபர்களுக்கும் செலுத்தப்பட்ட எண்ணிக்கையை வெவ்வேறாக இனங்காணக்கூடியவாறு புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமையால், அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு காணியை இழந்தோருக்கே செலுத்தப்பட்டதா என கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

## 4.4 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யாமல் கைவிடல்

பாரிய அளவிலான அபிவிருத்திச் செயற்திட்டங்களை மீள் வியூகப்படுத்தல் மற்றும் விரைவுபடுத்தல் (RAMP) குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துதல் தொடர்பாக பிரதமரின் செயலாளரினால் 2022 ஒக்தோபர் 07 திகதி நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரை விழித்து ஒவ்வொரு செயற்திட்டத்திற்குமாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்தப் பரிந்துரைகள் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையை பரிசோதனை செய்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **குபுக்கன்ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம்**<br>இந்த செயற்திட்டம் ரூபா 32,397.3 மில்லியனிற்கான மதிப்பீடொன்றின் கீழ் 2015 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 06 வருடங்களில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்தக் காலப் பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.<br>மேற்கூறிய கடிதத்தில் காட்டப்பட்டுள்ளவாறு ‘‘இந்தச் செயற்திட்டம் வெளிநாட்டுக் கடனுதவியுடனான விசேட கோறிக்கையொன்று இன்றிய (Unsolicitted) முன்மொழிவுடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டமொன்றாக காணப்பட்டமையால் உரிய நிதியங்கள் வழங்கல் தொடர்பாக அறுதியான தீர்மானமொன்று திறைச்சேரியில் இருந்து கிடைக்கும் வரை இதன் பிரதான செயற்பாடுகள் ஏதும் ஆரம்பிக்காமல் இருப்பதற்கு செயற்படுதல்’’ என பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் செயற்திட்டத்திற்கான நிதியம் வழங்கல் தொடர்பாக அறுதியான தீர்மானம் ஒன்று திறைசேரியினால் இதுவரை பெற்றுக்கொண்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2015 ஆண்டு முதல் 2023 வரை செலவிடப்பட்ட ரூபா 521.54 மில்லியனிற்கான கிரயம் விளைவற்றிருந்தது. | இந்தச் செயற்திட்டத்தின் நிர்மாண வேலை அலுவல்கள் பாரிய அளவிலான அபிவிருத்திச் செயற்திட்டங்களை மீள் வியூகப்படுத்தல் மற்றும் விரைவுபடுத்தல் குழுவின் தீர்மானத்தின் படி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் தொடர் நடவடிக்கைகள் தொடர்பாக வழங்கப்படுகின்ற அறிவுரைகளின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த செயற்திட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட போது செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதியை கடந்திருந்தது. அதன் படி உரிய காலத்தில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்திருந்தால் செயற்திட்டத்தை தற்காலிகமாக நிறுத்தும் தீர்மானம் எடுக்க வேண்டி நேரிட்டிருக்காது. அதன் காரணமான உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டியதுடன், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இதுவரை மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்காக நலன்கள் பெற்றுக்கொள்ளாமையினால் செயற்திட்ட அலுவல்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | **குடாவிலச்சிய நீர்த்தேக்கத்தை மறுசீரமைத்தல்**<br>ரூபா 6,000 மில்லியனிற்கான மதிப்பீடொன்றின் கீழ் இந்த நீர்த்தேக்கத்தின் மறுசீரமைப்பு அலுவல்கள் 2021 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2023 ஆண்டில் பூர்த்தி செய் திட்டமிடப்பட்டிருந்தது. குறிப்பிட்ட | இந்தச் செயற்திட்டத்தின் நிர்மாண வேலை அலுவல்கள் பாரிய அளவிலான அபிவிருத்திச் செயற்திட்டங்களை மீள் வியூகப்படுத்தல் மற்றும் விரைவுபடுத்தல் குழுவின் | அனுராதபுரத்தில் உத்தேச மருந்து வலயத்திற்கான நீர் வழங்குதல் மேலதிகமாக செயற்திட்டத்தின் மூலம் கிடைக்கக் கூடிய ஏனைய நலன்கள் தொடர்பாக அமைச்சரவையை |

கடிதத்தின் படி புதிய கைத்தொழில் குடியெற்றங்கள் நிர்மாணிப்பதற்கு பதிலாக தற்போது காணப்படும் கைத்தொழில் குடியேற்றங்களை மாத்திரம் தொடர்ந்து செயற்படுத்த வேண்டும் என கொள்கைசார் தீர்மானம் ஒன்று எடுத்திருந்தமையால் அதன்படி, ஒயாமடுவ மருந்து உற்பத்தி கைத்தொழில் குடியேற்றம் முன்வரும் இரண்டு வருடங்களில் செயற்படுத்தப்படும் என சுகாதார அமைச்சிலிருந்து உறுதிப்பாடொன்று பெற்றுக்கொள்வதற்கும் அவ்வாறின்றேல் இந்த செயற்திட்டத்தை நிறுத்துவதற்கும குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அதன்படி, சுகாதார அமைச்சிலிருந்து இது தொடரபாக உறுதிப்பாடொன்று பெற்றுக்கொண்டிருக்கவில்லை. அவ்வாறாயினும் இந்த செயற்திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கக் கூடிய நலன்களில் நலனொன்று மாத்திரம் ஆகிய ‘‘அனுராதபுரத்தின் உத்தேச மருந்து வலயத்திற்காக நீர் வழங்குதல்’’ என்பதை கவனத்தில் எடுத்து மொத்த செயற்திட்டமும் நிறுத்தப்பட்டிருந்தது. அதன்படி, 2021 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட ரூபா 162.14 மில்லியனிற்கான கிரயம் விளைவற்றதாக காணப்பட்டது.

தீர்மானத்தின் படி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் தொடர் நடவடிக்கைகள் தொடர்பாக வழங்கப்படுகின்ற அறிவுரைகளின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

அறிவுறுத்துவதற்கு மற்றும் இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகையில் நலன்கள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**(இ) மொனராகலை மாவட்டத்தின் துரித நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்திட்டம் (வெல்லஸ்ஸ நவோத்ய)**

ரூபா 2,500 மில்லியனிற்கான மதிப்பீடொன்றின் கீழ் 2016 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2024 ஆண்டு பூர்த்தி செய்வதற்கு

இந்தச் செயற்திட்டத்தின் நிர்மாண வேலை அலுவல்கள் பாரிய அளவிலான அபிவிருத்திச்

குழுவின் தீர்மானத்தின் படி காணப்பட்ட செயற்பாடுகளை பயன்படுத்தக்கூடியவாறு

| | | | |
|---|---|---|---|
| | எதிர்பார்த்து இந்தச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மேற்கூறிய கடிதத்தில் காட்டப்பட்டுள்ளவாறு இந்த செயற்திட்டத்திற்குரிய கெடகமுவ குளம் உட்பட செயற்படுத்தப்பட்டு வருகின்ற ஊராஉல குளம், பைலேகம குளம் மற்றும் மொரகொல்ல குளத்தில் தற்போது நடைபெறுகின்ற செயற்பாடுகள் மாத்திரம் பயன்படுத்தக்கூடியவாறு நிலைபேறாக பூர்த்தி செய்யும் செயற்திட்டம் 2022 ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்ட போதிலும், அவ்வாறு செயற்படாமல் 2024 ஆண்டு முதல் நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டிருந்தது. இதன்படி, 2016 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,221.21 மில்லியன் தொகை விளைவற்றுக் காணப்பட்டது. | செயற்திட்டங்களை மீள் வியூகப்படுத்தல் மற்றும் விரைவுபடுத்தல் (RAMP) குழுவின் தீர்மானத்தின் படி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் தொடர் நடவடிக்கைகள் தொடர்பாக வழங்கப்படுகின்ற அறிவுரைகளின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறாக பூர்த்தி செய்யாமல் கைவிடல் தொடர்பாக அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், செயற்திட்டதிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மூலம் நலன் பெற்றுக்கொள்வதற்காக வேலைத் திட்டமொன்று தயாரிக்க வேண்டும். |
| **(ஈ)** | **ஹிம்பிலியாகட வத்தேகெதர நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்**<br>இந்த செயற்திட்டம் ரூபா 7,155 மில்லியன் மதிப்பீடொன்றின் கீழ் 2020 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2024 ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மேற்கூறிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு சுரங்கத்தில் மற்றும் வத்தேகெதர் குளக்கட்டு நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு செயற்திட்டத்தின் ஏனைய தொழிற்பாடுகளை தற்காலிகமாக நிறுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்யாமல் 2024 மார்ச் மாதம் முதல் நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டிருந்தது. அதன்படி, இந்த செயற்திட்டத்திற்காக 2020 ஆண்டு முதல் 2024 மார்ச் வரை மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 664.40 மில்லியனிற்கான கிரயம் | வத்தேகெதர குளத்தின் நிர்மாண வேலைகள் தொடர்பாக 2024 ஏப்ரல் 03 திகதி பிரதமர் செயலகத்தினால் வழங்கப்பட்ட அறிவுரையின் படி செயற்திட்டத்தின் வேலை அலுவல்கள் நிறுத்தப்பட்டுள்ளது. | குழுவின் தீர்மானத்தின் படி செயற்படாமல் செயற்திட்டத்தை கைவிடல் தொடர்பாக அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவின் மூலம் நலன்கள் பெற்றுக்கொள்வதற்காக வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விளைவற்ற செலவொன்றாக இருந்தது. | | |
| (உ) | **மஹகல்கமுவ நீரேந்து கால்வாய் நிர்மாணிக்கும் செயற்திட்டம்**<br>2011 செப்தம்பர் 11 திகதி கிடைத்திருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் மீது நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் மூலம் செயற்படுத்துவதற்காக உத்தேசித்துள்ள பாரிய / மத்திய தர நீர்ப்பாசன செயற்திட்டங்கள் தொடர்பாக பத்தாண்டு திட்டத்தின் கீழ் இந்த செயற்திட்டம் 2014 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 500 மில்லியன் தொகையாக காணப்பட்டது. 2014 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை 14 கிலோ மீற்றர் நீளமான கால்வாய் இடையிடையே தோண்டுவதற்காக ரூபா 374.95 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், கால்வாயின் ஒரு பகுதி உரிய முறையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2024 ஆண்டு முதல் இந்தச் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தமையால் இந்தச் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த் செலவு விளைவற்ற செலவொன்றாக மாறியிருந்தது. | இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் மேலதிக ஏற்பாடுகள் வழங்கப்படின் இந்தச் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய இயலுமாகும். இந்தச் செயற்திட்டத்தில் சேவையாற்றிய அனேகமானோர் தற்போது ஓய்வு பெற்றுள்ளமையால் மேற்கொள்ளப்பட்ட கருமங்கள் தொடர்பாக தகவல்கள் பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் உள்ளது. நீர்ப்பாசன அமைச்சுச் செயலாளரினால் இந்த செயற்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைகள் தொடர்பாக விடயங்களை கண்டறிவதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், அதன் அறிக்கை இதுவரை கிடைத்திருக்கவில்லை. | வேலைத் திட்டத்தின் படி அபிவிருத்திச் செயற்திட்டங்கள் நிர்மாணித்தல் மேற்கொள்ளப்படாமை, முடிவொன்றின்றி பகுதி பகுதியாக அகழ்தல், பகுதி பகுதியாக நிர்மாண வேலை மேற்கொள்ளல் மற்றும் செலவுகளை இனங்காணக்கூடியவாறு கணக்கீடு செய்யாமை திணைக்களத்தின் பொதுவான சுபாவமாக காணப்படுகின்றமையால் குறைபாடுகளை சரி செய்வதற்கு வேலைத் திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். அமைச்சுச் செயலாளரினால் நியமனம் செய்யப்பட்ட குழு சுமார் ஒரு வருடம் கடந்திருந்தமையால் அந்த அறிக்கையை விரைவாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்து அதன் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து செயற்திட்டத்தின் மூலம் எதிர்ப்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.5 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயலாற்றுகை அறிக்கையின் பந்தி 2.3 இன் கீழ் எதிர்கால இலக்குகளை காட்டும் போது அனேக விடயங்களின் கீழ் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற | எதிர் கால இலக்குகள் காட்டும் போது 04 விடயங்கள் மாத்திரம் உட்படுத்தப்பட்டுள்ளதுடன், அந்த இலக்குகள் 2027 ஆண்டளவில் | வருடாந்த அறிக்கையின் எதிர் கால இலக்குகளின் கீழ் நிறைவேற்றுவதற்கு எதிர் பார்க்கப்பட்டுள்ள பணிப் பொறுப்புக்கள் மற்றும் அவை ஒவ்வொரு |

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பொறுப்புக்கள் மற்றும் அவை ஒவ்வொரு ஆண்டிலும் நெருங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையை காட்டக்கூடிய காலச் சட்டகமொன்று சமர்ப்பித்திருக்கவில்லை. | நெருங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என குறிப்பிடப்பட்டிருந்தது. | ஆண்டின் போதும் நெருங்குவதற்கு எதிர் பார்க்கப்படும் எண்ணிக்கைகளை காட்டும் காலச் சட்டகமொன்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2024 ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் 14 வலய நீர்ப்பாசன அலுவலகங்கள், 52 பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்கள், 14 இயந்திர வேலைத் தளங்களுக்காக 2024 ஆண்டில் ஒவ்வொரு செலவு விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், செலவுகள் மற்றும் அதன் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்த கருமங்கள் காட்டப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமான ஒவ்வொரு அலுவலகங்களினாலும் நிறைவேற்றப்பட்டிருந்த கருமங்களினூடாக அடைந்துள்ள வெற்றி, நலன்கள், சவால்கள் மற்றும் முன்னேற்றம் என்பவற்றை கணக்காய்வில் உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை. | இந்த ஒவ்வொரு அலுவலகங்களுக்கும் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், செலவுகள் மற்றும் அதன் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்த கருமங்களை காட்டுவதற்கும் ஒவ்வொரு அலுவலகங்களின் மூலமும் நிறைவேற்றியிருந்த கருமங்களின் மூலம் நெருங்கியிருந்த வெற்றி, நலன்கள் மற்றும் சவால்கள் வெவ்வேறாக இனங்காணக் கூடியவாறு தகவல்கள் உட்படுத்தல் செயற்பாட்டு ரீதியாக கடினமாக உள்ளதுடன், அதனை திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் உட்படுத்த வேண்டும் என இதற்கு முன்னர் எதுவித சந்தர்ப்பத்திலும் அறிவுறுத்தியிருக்கவில்லை. | ஒவ்வொரு அலுவலகங்கள் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள கருமங்கள் ஊடாக நெருங்கியிருந்த வெற்றி, நலன்கள் மற்றும் சவால்கள் வெவ்வேறாக இனங்காணக் கூடியவாறு முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கும் செய்முறையொன்று அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், ஆண்டின் போது செயற்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள செயற்திட்டங்கள் தொடர்பாக தகவல்கள், ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளுடன் வருடாந்த அறிக்கையில் அறுதியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.6 பெறுகைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டலின் 3.7 இன் பிரகாரம் தனது ஊழியர்கள் மற்றும் உபகரணங்களை பயன்படுத்தி நிறைவேற்றும் பெறுகை முறை பொருந்துவது தனது நிறுவனத்தின் போதிய எண்ணிக்கையான ஊழியர் எண்ணிக்கையொன்று மற்றும் போதியளவு இயந்திர உபகரணங்கள் போதியளவு காணப்படின் மாத்திரம் எனினும், போதியளவு ஊழியர் எண்ணிக்கையொன்று மற்றும் இயந்திர உபகரணங்கள் | எதிர் காலத்தில் நேர் முறை (Force Account) பயன்படுத்துவற்கு முன்னர் தனது மனித வளம் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக மதிப்பீடொன்று மேற்கொண்டு குறைந்த எண்ணிக்கை மாத்திரம் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும் படி உரிய அலுவலகங்களுக்கு அறிவுறுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | தனது ஊழியர்கள் மற்றும் உபகரணங்களை பயன்படுத்தி நிறைவேற்றும் பெறுகை முறையின் கீழ் தொழிற்சாலைகளை செயற்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்குவதற்கு முன்னர் போதியளவு எண்ணிக்கையான ஊழியர்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் காணப்படுகின்றனவான என உறுதிப்படுத்திக்கொள்வதற்கு வேலைத் திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படுகின்றதென உறுதிப்படுத்தாமல் 06 பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களினால் அவற்றினால் செயற்படுத்தப்படும் நிர்மாண வேலைகளின் மூலம் 39 சதவீத தனது ஊழியர்கள் மற்றும் உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படும் பெறுகை முறை (Force Account) கீழ் செயற்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இந்தப் பெறுகை முறை (Force Account) உழைப்புக்களை பெற்றுக்கொள்வதற்காக கடை பிடிக்க வேண்டிய நடைமுறைகள், அதற்காக பயன்படுத்த வேண்டிய உடன்படிக்கைப் படிவங்கள், உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல் மற்றும் கருமங்கள் நிறைவேற்றுதல் தொடர்பாக பேணிச் செல்ல வேண்டிய ஆவணங்கள் கொடுப்பனவு மேற்கொள்ளும் அடிப்படை ஆகிய விடயங்கள் தொடர்பாக பொதுவான அறிவுரைகள் மற்றும் விவரக் குறிப்புக்கள் வழங்கியிருக்கவில்லை. இதன் காரணமாக ஒவ்வொரு பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களினால் அந்த விடயங்கள் முறைசாரா விதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | எதிர் காலத்தில் இது தொடர்பாக பொருத்தமான, பொதுவான நாளதுவரையாக்கப்பட்ட, விவரக் குறிப்புக்கள் அலுவலகத்திற்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நேர் உழைப்பு அடிப்படையில் நிர்மாண வேலைகள் செயற்படுத்தும் போது ஏற்படுகின்ற முறைசாரா தன்மைகளை தவிர்த்துக்கொள்வதற்காக கடைபிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள் மற்றும் பயன்படுத்தப்பட வேண்டிய ஆவணங்களுக்குரிய படிவங்களை அறிமுகப்படுத்தி உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காக சுற்றறிக்கை அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும். |
| (இ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 4.3.2 இன் படி மொத்த கிரய மதிப்பீடு பெறுகை கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட வேண்டிக் காணப்பட்டது. எனினும் ரூபா 15.15 மில்லியனிற்கான மதிப்பீட்டுப் பெறுமதியுடனான ஏரு குளத்திலிருந்து மகாகந்தராவ குளத்திற்கு நீர்ப்பாய்ச்சப்படுகின்ற நீரேந்து கால்வாயின் 8 + 650 கிலோ | இது தொடர்பாக ‘‘விளக்கமளித்தல்’’ நீர்ப்பாசனப் பணிப்பாளர் (அனுராபுரம்) இடம் வேண்டப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல்களை கடைபிடிக்காமல் செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மீற்றர் இடத்தில் முதிரிப்பு குளத்திலிருந்து மகாநொச்சிக் குளத்திற்கு நீர்ப் பாய்ச்சும் வழிப்படலை நிர்மாணிக்கும் போது மண் மற்றும் விரிப்பு படிவ வேலைகள் உட்பட ஆரம்ப கருமங்கள், கம்பி வேலைகள் மற்றும் கொங்கிரீட் வேலைகள் என 03 பகுதிகளாக பகிர்ந்து பிராந்திய பெறுகைக் குழுவின் கீழ் நடவடிக்கை எடுத்திருந்தது.

## 4.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திருத்த வேலைக்காக அனுப்பப்பட்டிருந்த 45 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக திருத்த வேலை கிரய மதிப்பீடு தயாரித்திருக்காததுடன், 32 வாகனங்களுக்காக கிரய மதிப்பு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், திருத்த வேலை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உதிரிப் பாகங்கள் இறக்குமதி செய்து திருத்த வேலை மேற்கொள்வதனால் செலாவணி விகிதாசாரத்தினால் பெறுமதி தளம்பல், முக்கியத்துவப் பதிவேட்டின் படி செயற்படுவதற்கு நேரிடுதல், அவசர தேவைப்பாட்டின் மீது அவற்றில் புறம்பான திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு நேரிடுதல், மதிப்பீடுகள் தயாரிப்பதற்காக போதியளவு எண்ணிக்கையான பதவியணியினர் காணப்படாமை தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | திருத்த வேலை அலுவல்கள் கால ரீதியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ)** | **ஹிம்பிலியாக்கட நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக மணல் கொள்வனவு செய்தல்**<br>பாரிய மணல் எண்ணிக்கையொன்று வழங்கும் போது எண்ணிக்கையை அளவை செய்வதற்காக அடுக்கு முறை மிகவும் பொருத்தமான மற்றும் வசதியான செய்முறை எனினும், இந்த செயற்திட்டத்திற்காக 1905 கியுப் மணல் எண்ணிக்கை, லோர்ட் கவுன்டிங் சீட் செய்முறையின் மூலம் அளவை | மணல் கொள்வனவின் போது லோர்ட் கவுட் செய்முறை கடைபிடிக்கப்பட்டுள்ளதுடன், இந்த இடத்திற்கு லொரிகளின் மூலம் எடுத்து வரப்படுகின்ற மணலின் உயரத்தை அளவை செய்வதற்காக அமையத் தொழிலாளர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டார். இதனை | இவ்வாறு பாரிய எண்ணிக்கையான வழங்கல்கள் எண்ணிக்கையை அளவை செய்யும் போது அடுக்கு (Pile) முறை பயன்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், இங்கு கொடுப்பனவு செய்யப்பட்ட இருப்பு எண்ணிக்கைக்கு சமமான தொகையொன்று |

| | | |
|---|---|---|
| உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன், மணலை அளவை செய்வதற்காக தற்காலிகமாக ஆட்சேர்க்கப்பட்டிருந்த அமைய தொழிலாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>இந்த மணல் கியுப் எண்ணிக்கை 788 கியுப் பயன்படுத்தப்பட்ட பின்னர் பொறியியல் உதவியாளரின் பொறுப்பில் காணப்பட வேண்டிய மணலின் எண்ணிக்கை 1117 கியுப்களாக இருக்க வேண்டிய போதிலும், 2024 மார்ச் மாதத்தில் செயற்திட்டத்தின் அலுவல்கள் நிறுத்தப்பட்டு மினிப்பே பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்திற்கு சாட்டப்பட்டிருந்ததுடன், அங்கு மீதியான மணலின் எண்ணிக்கை பௌதீக ரீதியாக 888 கியுப்கள் காணப்பட்டது.அதன்படி, பொறியியல் உதவியாளரின் பண்ட அறிக்கையின் படி காணப்பட்ட மீதியை விட ரூபா 3.24 மில்லியனிற்கான 229 கியுப் மணல் குறைவாக காணப்பட்டது. | கணிக்கும் போது எடுத்துச் செல்லப்பட்ட மணலுடன் ஒப்பீடு செய்தல் சரியானது அல்ல. வெளிக்களத்தில் உத்தியோகத்தர்கள் மேற்கொண்டுள்ள தவறொன்றாகும். செய்முறைசார் நிலைமை தொடர்பாக கவனம் செலுத்தாமல் அந்த கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரதான காரணம் மணல் கொள்வனவின் போது அளவை செய்யப்பட்ட ஒரு செய்முறையின் படியும், மீதியாக காணப்படும் மணல் எண்ணிக்கை கணிக்கப்பட்டது வேறொரு செய்முறையும் ஆகும். ஆரம்பத்தில் கொள்வனவின் போது லோர்ட் கவுண்ட் முறையில் கடைபிடிக்கப்பட்டதுடன், மீதியான மணலை கணிக்கப்பட்டது அடுக்கு அலவை முறை (Pile measurement) மூலமேயாகும். | நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டியிருந்தமையால் மணல் குறைவிற்கு பொறுப்பான உத்தியோகத்தரை தீர்மானிப்பதற்காக விசாரணையொன்று நடாத்தி நட்டத்தை பொறுப்பான உத்தியோகத்தரிடம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.8 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கொடுப்பனவு செய்முறை** | | |
| (i) வலய நீர்பாசன பணிப்பாளர் அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள கணக்காளர்களுக்கு கொடுப்பனவுகள் சான்றுபடுத்தக்கூடிய, அந்த சேவை நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ள பிராந்திய நீர்ப்பாசண பொறியியலாளர் அலுவலகம் எவை என மற்றும் அவ்வாறு செய்ய முடியாத சந்தரப்பங்களில் பிரதான | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கொடுப்பனவினை சான்றுபடுத்தும் சரியான செய்முறையொன்று ஏற்படுத்துவதற்கு 2025 பெப்ரவரி 23 திகதி குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், 2025 நவம்பர் 04 திகதி அரச கணக்குக் குழுக் கூட்டத்தின் செயலாளருக்கு இந்தக் குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குக் குழுக் கூட்டத்தினால் வழங்கியிருந்த பரிந்துரையின் படி கணக்காளர்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்கள் பொறியியல் உதவியாளர் சேவையின் சேவை யாப்புக் கோவையில் இருந்து அகற்றி கொடுப்பனவு செய்முறை தொடர்பாக முறையான செய்முறையொன்று |

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தருக்கு கொடுப்பனவை சான்றுபடுத்தும் அதிகாரம் வழங்கக்கூடிய அலுவலகங்கள் எவை என (கண்ககாளர்கள் நியமனம் செய்யும் வரை தற்காலிக தீர்வொன்றாக) தொடர்பாக நீர்ப்பாசன அமைச்சு மற்று நீர்ப்பாசன திணைக்களம் இணைந்து குழுவொன்று நியமனம் செய்து விரிவாக கலந்துரையாடி நிதியமைச்சையும் தொடர்பு கொண்டு ஒரு மாதத்தில் பொருத்தமான செய்முறையொன்று தயாரிக்கும் படியும் பொறியியல் உதவியாளர் சேவையின் சேவை யாப்பினை திருத்திய பின்னர் சுற்றறிக்கையொன்றின் மூலம் அது தொடர்பாக குறிப்பிட்ட தரப்பினர்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி அந்த சுற்றறிக்கை வெளியிடுவதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியொன்றுடன் அரச கணக்குக் குழுத் தலைவருக்கு பிரதியொன்று சமர்ப்பிக்கும் படியும் 2024 ஓகஸ்ட் 07 திகதி நடைபெற்ற அரச கணக்குக் குழுக் கூட்டத்தில் பரிந்துரை வழங்கப்பட்ட போதிலும், இதுவரை அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், இந்த கொடுப்பனவு செய்முறை நிதிப் பிரமாணங்களுக்கு முரணானது எனவும், அதனை சரி செய்துகொள்ளும் படியும் 2006 ஆகஸ்ட் 25, 2011 மார்ச் 24, 2011 ஜூன் 07 திகதி மற்றும் 2016 செப்தம்பர் 22 திகதிகளில் நடைபெற்ற அரச கணக்குக் குழுக் கூட்டங்களில் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது.

விரைவாக தயாரித்து குறிப்பிட்ட தரப்பினரை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| (ii) 2011 மார்ச் 24 திகதி நடைபெற்ற அரச கணக்குக் குழுக் கூட்டத்தின் கட்டளையை அமுல்படுத்தல் தொடர்பாக நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் 2023 நவம்பர் 22 திகதி நீர்ப்பசன அமைச்சுச் செயலாளரினால் அரச கணக்குக் குழு தலைவர் விழித்துள்ள கடிதத்தின் 05 ஆவது பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு வட்டார உதவியாளர்களின் செலவுகளை சான்றுபடுத்தும் உச்சமட்ட வரையறை ரூபா 2 மில்லியன் தொகை வரை வரையறுக்கப்பட்டிருந்தது. அதைவிட கூடிய பெறுமதியுடனான உறுதிச் சீட்டுக்களை சான்றுபடுத்துதல் நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்காளரினால் மேற்கொள்ள வேண்டும் என காட்டப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், அந்த வரையறையினை மிகைக்கக்கூடியவாறு கொடுப்பனவுகள் சான்றுபடுத்தப்பட்டிருந்தது. தெரிவுப் பரிசோதனையின் படி 12 சந்தர்ப்பங்களில் அவ்வாறு ரூபா 2 மில்லியன் வரையறையை மிகைத்து கொடுப்பனவு மேற்கொண்ட பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 43.5 மில்லியன் தொகையாக காணப்பட்டது. | இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என உரிய வலய நீர்ப்பாசன பணிப்பாளர்களுக்கு நினைவூட்டல்கள் மற்றும் பதில் அனுப்பும் படி அறிவிக்கப்பட்டது. | நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டிருந்த அறிவுரைகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக முறையான விசாரணை மேற்கொண்டு அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| **(ஆ) அங்கீகாரம் இன்றிய நிர்மாண வேலைகள் மற்றும் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளல்** | | |
| (i) 1983 இன் 23 ஆம் இலக்க நீர்ப்பாசன (திருத்திய) சட்டத்தின் பிரிவு 02 இன் பிரகாரம் 1946 இன் 32 ஆம் இலக்க நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் 65 ஆவது பிரிவுக்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் படி ஏதேனும் | நாடு பூராகவும் பரந்துள்ள பல்லாயிரம் வருடம் பழமையான நீர்பாசன வேலைகளில் நீண்ட காலமாக ஏற்பட்டிருந்த காணி அப்புறப்படுத்தல் மற்றும் அங்கீகாரமின்றி வதிதல் தொடர்பாக முழுமையான கணிப்பீடொன்று மேற்கொண்டு வரைபடம் தயாரிக்கப்படின் அந்த | அங்கீகாரமின்றிய செயற்பாடுகள் தொடர்பாக நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் படி மற்றும் 1983 இன் 23 ஆம் இலக்க நீர்ப்பாசன (திருத்திய) சட்டத்தின் |

நபர் ஒருவரினால் அருவியொன்று, கால்வாயொன்று, நீரோட்டமொன்று அல்லது குளமொன்று தடைப்படும் விதமாக அல்லது சட்ட விரோதமான அபகரித்துக் கொள்ளும் அல்லது ஏதேனும் நீர்ப்பாசன நிர்மாண வேலையொன்றுக்கு சேதம் விளைவிக்கும் சந்தர்ப்பத்தில் எழுத்துமூல அறிவித்தல் ஒன்றின் மூலம் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதியினுள் அந்த தடையினை அகற்றும் படி அல்லது அந்த அபகரித்தலை நிருத்தும் படி அல்லது நட்டத்தினை திருத்த வேலை செய்யும் படி அரச முகவரினால் (Government Agent) அந்த நபருக்கு விதிக்கப்படுதல் சட்டரீதியாக இருக்க வேண்டும். அவ்வாறு அறிவித்தல் ஒன்றை பெற்றுக்கொண்ட ஏதேனும் நபரொன்றினால் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதியில் அதில் காணப்படும் விதிமுறைகளுக்கு இணங்க அதனை மறுத்தல் அல்லது புறக்கணித்தல் அல்லது அந்த அறிவித்தல் ஒப்படைக்கும் உரிய ஆள் எவர் என சந்தேகம் காணப்படின், அந்த தடையை அகற்றுவதற்கு அல்லது அந்த அபகரித்தலை நிறுத்துவதற்கு அல்லது அந்த சேதத்தினை திருத்துவதற்கு அரசாங்க முகவரினால் செயற்படுத்தல் சட்டரீதியாக இருக்க வேண்டும் எனினும், 2025 ஒக்தோபர் 17 திகதி வழங்கியிருந்த தகவல்களின் படி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் நிறுவகிக்கப்படும் 387 குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் அணைக்கட்டுக்கள்ல் பிரிவு 02 இன் பிரகாரம் அங்கீகாரம் இன்றிய நிர்மாண வேலைகளை இனங்கண்டு விரைவாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், மேலும், இவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்படாமல் இருப்பதற்காக வேலை திட்டமொன்று அமுல் நடாத்தப்பட வேண்டும்.

விடயத்திற்காக முழுக் காலத்தை ஈடுபடுத்தக்கூடிய பொருத்தமான பயிற்சியுடைய உத்தியோகத்தர் தொகுதியொன்று தேவையான பௌதீக வளங்களுடன் இணைப்பதற்கு இந்த அணைத்துத் தகவல்களும் பெற்றுக்கொள்வதற்காக மிகவும் செயன்முறை சாத்தியமான மற்றும் பொருத்தமன செய்முறை என முன்மொழிகின்றேன்.

| | | | |
|---|---|---|---|
| | 123 தொடர்பாக மாத்திரம் 738 அங்கீகாரமின்றிய நிர்மாண வேலைகள் இனங்கண்டு எழுத்துமூல அறிவுறுத்தல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், 1983 இன் 23 ஆம் இலக்க நீர்ப்பாசன (திருத்திய) சட்டத்தின் (2) இன் உப பிரிவு (2) இன் பிரகாரம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ii) | ஒவ்வொரு நீர்ச் செயற்திட்டங்கள், குளங்கள் மற்றும் நீர்த் தேக்கங்கள் காப்புப் பகுதியில் அல்லது குள தரையில் காணப்படும் நிர்மாண வேலைகள் வர்த்தக நிலையங்கள், கட்டிடங்கள், பயிர்ச் செய்கைகள் தொடர்பாக வெவ்வேறாக கணிப்பீடொன்று மேற்கொண்டிருக்காததுடன், அங்கீகாரமின்றி நிர்மாண வேலைகள் மற்றும் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள இடங்களை இனங்காணக்கூடியவாறு எல்லைகள் அடையாளப்படுத்தியிருக்கவில் லை. | வெளிக்களத்தில் இனங்காணப்படட அங்கீகாரமின்றிய செயற்பாடுகளுக்காக நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அறிவித்தல்கள் வழங்குவதற்கும் அரச காணிகள் (உரித்தினை திருப்ப எடுத்தல்) சட்டத்தின் கீழ் மேற்கொண்டு சட்ட செயற்பாடுகளுக்கு அணுகுதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும், நாடு பூராகவும் பரந்துள்ள பல்லாயிரம் வருடம் பழமையான நீர்பாசன வேலைகளில் நீண்ட காலமாக ஏற்பட்டிருந்த காணி அப்புறப்படுத்தல் மற்றும் அங்கீகாரமின்றி வதிதல் தொடர்பாக முழுமையான கணிப்பீடொன்று மேற்கொண்டு வரைபடம் தயாரிக்கப்படின் அந்த விடயத்திற்காக முழுக் காலத்தை ஈடுபடுத்தக்கூடிய பொருத்தமான பயிற்சியுடைய உத்தியோகத்தர் தொகுதியொன்று தேவையான பௌதீக வளங்களுடன் இணைப்பதற்கு இந்த அணைத்துத் தகவல்களும் பெற்றுக்கொள்வதற்காக மிகவும் செயன்முறை சாத்தியமான மற்றும் பொருத்தமன செய்முறை என முன்மொழிகின்றேன். | ஒவ்வொரு நீர்ச் செயற்திட்டங்கள், குளங்கள் மற்றும் நீர்த் தேக்கங்களின் காப்புப் பிரதேச எல்லைகள் அடையாளப்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(இ) உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள்**

| | | |
|---|---|---|
| (i) கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்த தகவல்களின் படி நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான இரத்மலான உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களில் வதிந்துள்ள இடமாற்றம் பெற்று சென்றிருந்தமையால் அகற்றும் கட்டளை வழங்கப்பட்டுள்ள 14 உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வு பெற்றுள்ள இரண்டு உத்தியோகத்தர்கள் 2024 திசெம்பர் 30 திகதி அளவிலும் உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களை திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கணக்காய்வு அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களுக்கு உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களை ஒப்படைக்கும் படி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், ஓய்வு பெற்றுள்ள உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களை திருப்பி ஒப்படைத்திருக்காத ஆட்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அங்கீகாரம் இன்றி வதியும் உத்தியோகத்தர்களை அகற்றுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சொந்தமான உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களை உத்தியோகத்தர்களுக்கு வழங்கும் போது அந்த வீடுகளுக்கான வாடகையை அறவீடு செய்யும் போது தாபனக் கோவையின் பத்தொன்பதாவது அத்தியாயத்தின் பிரிவு 5.2.1 இன் படி விவாகமான உத்தியோத்தரின் சம்பளத்தில் 12.5 சதவீதமும் விவாகமாகாத உத்தியோத்தரிடம் 7.5 சதவீதமும் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அனேகமான உத்தியோகத்தர்களிடம் அந்தப் பெறுமதியை விட குறைந்த பெறுமதியொன்று அறவீடு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வினால் அழைக்கப்பட்ட தகவல்களின் படி மொனராகல மற்றும் வெள்ளவாய பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் 25 உத்தியோகத்தர் தொடர்பாக மாத்திரம் மேற்கூறிய பிரிவின் | ‘‘உத்தியோகபூர்வ வாசஸ்தள வாடகைத் திருத்தம்’’ என்ற தலைப்பில் அனைத்து நீர்ப்பாசன பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி, புதிய குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு அதற்காக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் படி உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களுக்குரிய வாடகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

படி செயற்பட்டிருக்காமையால் வருடாந்தம் அரசு ரூபா 860,197.56 இற்கான வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

## 5. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீர்த்தேக்கங்களின் கொள்திறன் 1000 மில்லியன் கனமீற்றரினால் 2030 ஆண்டில் அதிகரிப்பதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், 2030 வரை ஒவ்வொரு ஆண்டுகளிலும் அந்த இலக்குகளை நெருங்கும் முறை மற்றும் அந்த எண்ணிக்கையை அதிகரிக்கும் குளங்கள் அல்லது நீர்த்தேக்கங்கள் அல்லது நீர்ப்பாசனத் திட்டங்கள் எவை என காட்டப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நிலைமை காரணமாக புதிய நீர்த்தேங்கள் நிர்மாணித்தல் மற்றும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற நீர்த்தேக்கங்களின் நிர்மாண வேலைகள் நிருத்துவதற்கு RAMP குழுவின் தீர்மானங்கள் மற்றும் NOR குழுவின் தீர்மானங்களின் படி ஏற்பட்டிருந்ததமையால் கொள்திறன் அதிகரிப்பொன்று ஏற்பட்டிருக்கவில்லை. | 2030 ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டுகளிலும் அந்த இலக்குகளை நெருங்கும் முறை மற்றும் அந்த எண்ணிக்கையை அதிகரிக்கும் குளங்கள் அல்லது நீர்த்தேக்கங்கள் அல்லது நீர்ப்பாசனத் திட்டங்களை சுட்டிக்காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 6. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2025 செப்தம்பர் 25 திகதி அளவில் 36 சிரேஷ்ட மட்ட 15 பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஊழியர் எண்ணிக்கை 19 தொகையும், மூன்றாம் மட்ட 17 பதவிகளில் 10 பதவிகளும் அங்கீகரிக்கப்பட்ட மொத்த பதவியணி எண்ணிக்கையில் 86 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்காக பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |